சிவாஜி

தில்லித் தலைநகரில் நாடாளும் நாயகர்கள்

சம்பளக் கணக்கென்ன?

அந்தஸ்து—அகமும் புறமும்

"தில்லித் தலைநகரில் தர்பார் மண்டபத்தில் வீற்றிருந்து நாடாளும் நாயகருக்குச் சம்பளம் எவ்வளவு? தேச தேசங்களுக்கெல்லாம் சென்று ஆங்காங்கு நமது ராஜ தூதர்களாகப் பணிபுரிவோர் பெறும் ஊதியம் என்ன?"

இந்தக் கேள்வி சந்தேகத்தால் கேட்கப்படாவிட்டாலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலின் விளைவாகவாவது இருக்கலாம். ஏன்?

"இந்திய வைசிராய் ரொக்கம்-
மாதம்
இருபதினாயிரம் வாங்கல்-
அநீதம்"

என்று இழுத்துக் கவிபாடி மேடைகளதிரப் பேசிய காங்கிரஸ் தொண்டர்களின் பிரசாரப் பிரசங்கங்கள் சாதாரண இந்தியனின் செவிகளில் இன்னும் ஒலி தேய்ந்து இற்றுப் போய்விடவில்லை.

"உலகத்திலேயே செல்வப் பெருக்கு மிகுந்த அமெரிக்க ஜனாதிபதிக்கோ, சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரதமருக்கோ கூடக் கிடைக்காத பெரும் தொகை, மாதச் சம்பளமாகவும் இதர செலவுகளுக்காகவும், இந்திய வைஸ்ராயும் மாகாண கவர்னர்களும் பெற்றார்கள். இந்திய விவசாயியின் முதுகு இந்தச் சுமைகளைத் தூக்க முடியாமல் கூன்விழுந்து போய்விட்டது. சுதந்திரம் வந்தால் இந்தச்சுமை குறைந்துவிடும்." இது சாதாரண இந்தியன் எதிர்பார்த்த புது வாழ்வு.

சமீபத்தில் வெளியான பத்திரிகைச் செய்திகள் ராஜாஜியின் சம்பளம் 20 ஆயிரங்கள் என்று கூறியபோது அதிர்ச்சி ஏற்பட்டதில் ஆச்சர்யமில்லை. வெளிநாடுகளில் இருக்கும் ஸ்தானீகர் பதினாயிரக் கணக்கில் செலவிடுகிறார்கள் என்ற செய்தியும் இந்திய மகனை ஏமாற்றமுறச் செய்வதாயிருக்கிறது. எதிர்பார்த்த மாறுதல் ஏன் ஏற்படவில்லை என்ற கேள்வி புறப்படுவது இயற்கைதானே?

சென்னையில் மாகாண சுயாட்சியின் பிரதமராக இருந்தகாலத்தில் ஆயிரக்கணக்கான சம்பள ஏற்பாட்டை நூற்றுக்கணக்கில் குறைத்துக்கொண்டு மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டிய ராஜாஜியா இவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்ற கேள்வியில் பொருளில்லையென்று சொல்லிவிட முடியுமா?

அன்னியர் ஆட்சியில் அநீதமாக இருந்த சம்பள ஏற்பாடுகள் இன்னமும் நீடிக்கிறது. ஆனால் அன்று கூறப்பட்ட குற்றச்சாட்டு "சுரண்டல்" என்பது. இன்று கூறப்படும் சமாதானம் "அந்தஸ்து" என்பது.

"கவர்னர்ஜெனரலின் சம்பளம் அவர் ஒருவருக்குமட்டுமென்று நினைக்கக்கூடாது. வெளிநாடுகளிலிருந்து வரும் விதம் விதமான விருந்தினரை உபசரிக்க வேண்டும். அதற்குரிய ஆடம்பரங்கள் வேண்டும். அந்த ஆடம்பரங்கள் மற்றை நாட்டவர் கண்முன்பு இந்தியா எவ்வளவு பெரிய தேசம், அதன் செல்வச்செழிப்புதான் என்னே என்ற மதிப்பை உண்டாக்க வேண்டும். வெளிநாடுகளிலுள்ள ஸ்தானீகர்களின் நிலையும் இப்படித்தான்"—இதுதான் இன்று கூறப்படும் சமாதானம்.

சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டின் அந்தஸ்துக்காகப் பெரும் செலவு தவிர்க்க முடியாததென்று கூறப்படுகிறது. இக வாழ்வில் புற அந்தஸ்துகளுக்குள்ள இடத்தை ஓரளவு புரிந்து கொள்ளவே செய்கிறோம். ஆனால் அந்தஸ்து ஒன்றே—வெறும் வெளிச்சம் என்ற சம்பிரதாயம் ஒன்றே—நம்முடைய கவனத்தை முழுவதும் கவர்ந்து விடக்கூடாதே என்ற கவலை தோன்ற வேண்டாமா?

(5-ம் பக்கம் பார்க்க)

எந்த நாளோ?

மண்ணின்று வானை நோக்கி
மாந்தர் தம் கரங்கள் தூக்கி
விண்ணிறை வியப்புக் கேங்கி
வீதியைப் பார்த்திருந்தால்,

வந்ததோர் சுடர்தான் மண்ணின்
வடிவிலே உயிர்கள் தம்மில்
சிந்தனை தேக்கிப் பின்னர்
சென்றது சுவடும் தேய்ந்தால்,

ஆண்டு தோறாண்டு தோறும்
அவன் வரும் வழியிலெல்லாம்
ஈண்டுநாம் நிறைந்து நின்றால்
இறைவரல் எந்த நாளோ

—"மந்த ஹாஸன்"

26-12-48 (சிறுவர் மலருடன்) விலை அணா 2



நான்காம் அத்தியாயம்

வீரன் உதயம்

சென்ற அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட மராத்திய வீரர் ஷாஹஜியென்றும், அவரது மனைவி ஜீஜாவென்றும், குழந்தை சாம்பாஜியென்றும் வாசகர்கள் ஊகித்திருப்பார்கள்.

ஷாஹஜி தன் மனையாளை விடுத்துச் சென்ற சந்தர்ப்பங்களும், காரணமும் சரித்திரத்தில் சரியாக விளக்கப்படவில்லை. கர்ப்பிணியான ஜீஜா எத்தகைய வேதனையுடன் அந்த சம்பவத்தைத் தாங்கியிருப்பார் என்று விளக்க வேண்டியதில்லை.

ஷாஹஜி தன் மகன் சாம்பாஜியுடன் பீஜபுரி நோக்கி விரைந்து பின்னடைந்து விட்டார். ஜீஜா தனிமையில் விடப்பட்டபோது அவளது வாசஸ்தலத்துக்கருகே இருந்த சில குறிப்பிட்ட மராத்திய வீரர்கள் அவளைப்பாதுகாக்க முனைந்தார்கள். அவ்வீராங்கனை காலவேகத்தையுணர்ந்து தன்னைத்தேற்றிக் கொண்டதுடன் மேலே ஆகவேண்டியதைச் செய்யத்துணிவுற்ருள். தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொறுப்பைவிடத் தன்னுள் ஒன்றியிருந்த உயிரைக்காக்கும் தாய்மைப் பொறுப்பே அவளை வாட்டிக் கொண்டிருந்தது.

ஷாஹஜி பிரிந்து சென்ற இரவுக்கு அடுத்த இரவே ஜீஜா பொறுக்கியெடுக்கப்பட்ட சில வீரர்களது காவலில் மேற்கே மலைப் பிராந்தியங்களை நோக்கி விரைந்தாள். உண்மையில் ஜீஜாவுடன் வெறும் காவலர் மாத்திரம் தொடரவில்லை. பக்கத்திலிருந்து பல குடும்பங்களே பெயர்ந்து புறப்பட்டன. இந்த அகதிகளது யாத்திரை மூன்று நாட்கள் காடுகளிலும், பாறைப் பிளவுகளினூடும் நீடித்தது.

இந்த யாத்திரையின் முடிவில் சிவனேரி என்னும் கோட்டையை ஜீஜாவின் தலைமையில் நகர்ந்த குழாம் அடைந்தபோது வாழ்வதற்கேற்ற வசதிகளுடன் அந்தப்பிராந்தியம் திகழவில்லை. அடர்ந்த காடுகளும், புதர்களுமாயிருந்த அந்தச்சூழலில் விலங்குகளின் அரவம் தவிர வேறொன்றும் கேட்கவில்லை.

போர்க்குழப்பம் நிறைந்த தட்சிணத்திலிருந்து ஒதுங்கிய அகதிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் வாய்ப்பு இந்தச் சூழலுக்கு இயல்பாயிருந்தது ஜீஜாவை இன்புறச் செய்தது. காடிகளின் அடிச்சுவடுகளால் பொறிக்கப்பட்டிருந்த அந்தப் பூமியில், வளைந்து வளைந்து செல்லும் நெடிய ஒற்றையடிப்பாதைகள் ஓய்வுகொண்ட மலைப்பாம்புகள் போல் தோற்றமளித்தன.

சிவனேரி கோட்டையை அடைந்த ஜீஜாவின் பரிவாரம் கோட்டைக்குள், விரைவில், தினசரி வாழ்க்கைக்கான ஒழுங்குகளைச் செய்துகொண்டது. சுற்றிலும் தோண்டப்பட்டிருந்த ஆழமான அகழைக் கடக்க தாழ்த்தவும், உயர்த்தவும் கூடிய ஒரு பெரிய பாலம் இருந்தது. போர்க்காலங்களில் மட்டுமே பயன் படக்கூடிய கோட்டையாகையால் கரடு முரடான அந்தப்பிராந்தியம் செப்பனிடப்படாமல் குழப்பமாகக் கிடந்தது. அந்தக் குழப்பமே அதன் பலமாக இருந்தது.

ஜீஜா தனது தந்தையின் மாளிகையைப்பற்றிச் சில நாட்கள் நினைத்துப்பார்ப்பதுண்டு. ஆனால் காலவேகத்தால் ஏற்பட்ட வாழ்க்கை மாறுதல்கள் அவளைக் குன்றச் செய்துவிடவில்லை. உண்மையில் அவளது மனக்குகையில் பதுங்கியிருந்த வீரமும், திட்பமும் மெதுவாகத் தலைதூக்கி அவளை ஒரு கர்மயோகியாக்கின என்றே சொல்ல வேண்டும்.

சூழ்ந்திருந்த காடுகளும்' குன்றுகளும் அவளை பயமுறுத்தவில்லை. குகையில் உறங்கியிருந்த சிம்மத்தின் சமாதானம் அவளை ஆட்கொண்டிருந்தது. குளம்புகளைப்பதித்து, வாட்களை வீசி, மரணத்தைப்பரப்பி, செல்வங்களைச் சூறையிட்டு, வாழ்வின் ஒழுங்கைக் குலைத்துவிட்ட மொகலாயர் படையும், தற்காப்புக்குத் துடித்து வாளோங்கி நின்ற பீஜபுரி சேனையும் சமர் புரிந்து நின்ற சமவெளிப் பிரதேசத்தினின்று சிறு ஓசைகூட சிவனேரியை எட்டவில்லை. குன்றுகளினூடே இனிய புகலாகத் திகழ்ந்தது சிவனேரி.

கோட்டையின் பாதுகாப்பான மூலையில் ஜீஜா சிறுகுடிசை அமைத்துக்கொண்டாள். தான் பெறப்போகும் குழவியை ஆவலுடன் எதிர்நோக்கிக் கனவுகள் காணுவதில் அவளது இதயம் லயித்திருந்தது.

ஜீஜா பக்தை. பரம்பொருளின் கருணையிலும், திறலிலும் நம்பிக்கையுடையவள். அந்தக் காலத்து ஹிந்து மதாசாரப்படி வாழ்வதில் கருத்தைச் செலுத்துபவள். தாய்மை எய்தவிருக்கும் மடந்தையர் பயிலவேண்டிய சுபகாரியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாள்.

சுவர்களில் இனிய சித்திரங்கள் எழுதிக் குங்குமம் தூவி, மஞ்சளிட்டு, மலர் கோர்த்துப் பராசக்தியன்னையை வழிபட்டு வந்தாள் அந்த வீராங்கனை ஜீஜா.

முதற் பேருன சாம்பாஜியினின்று பிரிந்த துயரம் வரவிருக்கும் பேறின் நினைவுபற்றி ஆற்றப்பட்டிருந்தது. தன் உள்ள முழுதையும்குவித்து, மலரவிருக்கும் மொட்டைப்பற்றிய கனவுகளில் லயித்தாள். தனது இரண்டாவது குழவியும் ஆண் குலத்தைச் சார்ந்தவன்தான் என்றும் அவன் மகத்தான சரித்திர நாயகனுகத் திகழப்போகிருன் என்றும் அவளால் ஊகிக்க முடிந்தது. சிந்தனையாலும், ஆவலாலும் துடிப்புற்றிருந்த மனத்தில் இனிய கனவுகள் பனிபோலப் படர்ந்தெழுந்து, நீலவானத்தின் ஆழத்தில் பதிந்திருந்த தாரகையைப்போன்றதொரு ஒளிச்சுடரைக் காட்டி மறைந்தன.

குன்றுகளின்நடுவே, அடர்ந்த காடுகளின் அரவணைப்பில், மோனத்தனிமையில், குழப்பத்தினின்று விடுபட்டிருந்த புகலில் வாசம் புரிந்த அவள் மாத்திரமா வீரனொருவன் வரவைக்குறித்துக் கனவு கண்டாள்?

இல்லை. தட்சிணத்திலும் மராத்தியப் பிராந்தியங்களிலும், இன்னும் தெற்கேயும் எங்கெங்கோவெல்லாம் ஹிந்து மக்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். ஹிந்து கலாசாரத்தை அழிவினின்றுகாத்து, உயர்த்த யாரோ ஒரு மகாவீரன் உதயமாகப் போகிருன் என்று ஆவலுடன் ஏங்கியிருந்தார்கள். துயரமும், குழப்பமும் அடைந்து தவித்த மக்களின் இதயச் சாளரங்களில் படர்ந்திருந்த நம்பிக்கையே இக்கனவுகளின் அடிப்படைக் காரணம் என்று விளக்க வேண்டியதில்லை. ஸ்திரமான சமாதானமின்றித் துயருற்றுவந்த மக்களுக்குத் தங்களை வழிநடத்திச் செல்லும் வீரன் ஒருவன் வரவிருக்கும் நிச்சயம் எத்தகைய இன்பமளித்திருக்கும்!

யோகிகளும், வீரர்களும் நாட்டின் பற்பல பிராந்தியங்களில் "வீரன் வருகிருன்" என்று தங்கள் கனவுகளை வெளியிட்டு மக்களை ஊக்கம் பெறச் செய்து வந்தனர். கவிகள் தங்கள் கற்பனைப் பூங்காவினின்று நறுமலர்கள் கொய்து வரவிருக்கும் வீரனுக்கு மாலை தொடுத்துப் பார்த்தார்கள்.

கனவு கடைசியில் நனவாயிற்று. 1627-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினாறும்தேதி ஜீஜா நாடு முழுதும் எதிர்பார்த்துக் காத்திருந்த வீரனை ஈன்றெடுத்தாள். புத்திரனது ஜனன காலத்தைப் போற்றும் முதற்கடமை பூண்ட தந்தை அருகேயில்லை. தாய் சோர்வுற்றுக் குடிசையில் படுத்திருந்தாள். ஆனாலும் சுபகாரியங்களுக்குக் குறைவு நேரவில்லை.

தூபங்களினின்று படர்ந்த நறுமணத்தின் சார்பில் ஆயிரம் கதிர்களது ஒளிதாங்கி அன்னையின் அருகே மலர்ந்திருந்தான் குழந்தை. வதனத்தில் முத்தமிட்டு பொன்னூலான கணையாழியின் மூலம் குழவியின் இதழில் தேன் வார்க்க வேண்டிய பொறுப்பை அதன் தந்தையின் சார்பில் அருகிருந்த ஒரு மராத்திய வீரர் ஏற்ருர்.

குழந்தையைச் சூழ்ந்துகண்ட கோட்டை மக்கள் எல்லையற்ற இன்பமடைந்தனர். விழாக் கொண்டாடினர்.

வீர சிவாஜியின் உதயம் சிவனேரி கோட்டையின் மறைவினின்று நாடு முழுதும் ஒளியும், இன்பமும் வாரித்தெளித்தது.

REGD. INSIST ON Original Wheel Mark Diamonds REGD.
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

திருச்சி வெலிங்டனில்
25—12—48 முதல்
மகத்தான 5-வது வாரம்
T. S. துரைராஜ்
நடிக்கும்
பிழைக்கும் வழி
— நடைபெறுகிறது —

சிவாஜி
ஆசிரியர் :—திருலோக சிதாராம்
கோட்டை 14 | திருச்சி, 26—12—48 சர்வதாரி-ஞு மார்கழி-மீ, 12-உ | முற்றுகை 4

திருச்சி ராக்ஸியில்
25—12—48 முதல்
T. R. மஹாலிங்கம்
K. L. V. வஸந்தா
N. S. கிருஷ்ணன் T. A. மதுரம்
நடித்த
பூலோக ரம்பை
மகத்தான 3-வது வாரம்
— நடைபெறுகிறது —

ஜெயபுரியில் கூடிய தேசீய மகாசபை

லட்சிய ஆவலும் நடைமுறை உண்மையும்

மொழிவாரிப் பிரிவினை மீண்டும் ஆராயப்படும்

யானையும் தேரும் அதிர நடக்கப், பல்லியங்கள் முழங்கத், தொண்டர்கள் கட்டியங் கூற, தேச நாயகர்—பட்டாபி சீதாராமையா பவனிவந்தார். பழந் தலைவர்களின் சேவை, இன்றைய அரசில் நிலை, உலகின் பொது விஷயங்களில் நம்முடைய பங்கு, உள் நாட்டு நிருவாகப் பொறுப்பு, சமுதாயச் சீரமைப்பு போன்ற பல்வேறு துறை பற்றி அவர் புரிந்த, பொருள் பொதிந்த தலைமைப் பிரசங்கம் ஆணித்தரமாக அமைந்திருக்கிறது. இதைக் கண்டு மகிழவும் ஆசி கூறவும் காந்தியடிகள் நம்மிடை இல்லாமற் போன வெறிச்சென்ற சூழ்நிலையில் முன்பொரு சமயம் பட்டாபியும் சுபாஷ் சந்திர போஸும் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட சம்பவத்தை நினைவூட்டத்தான் செய்கிறது.

தீர்மானங்கள் பல நிறைவேறியது வழக்கத்தை யொட்டியதுதான்; புதுமைகளோ அதிர்ச்சியடையத்தக்கதோ ஒன்றுமில்லை என்றுதான் எடுத்த எடுப்பில் தோன்றுமாறு நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

ஜெயபூர் சென்று திரும்பிய தமிழ் நாட்டுத் தலைவர் காமராஜர் தாம் இன்புறக் கண்டுவந்த விழாச் சிறப்பைக் குறித்துச் சேதி விடுத்திருக்கிறார், ஜெயபுரி காங்கிரஸ் மகத்தானதாக அமைந்ததென்று.

ஜெயபுரி காங்கிரசுக்கும், பழைய காங்கிரஸ் மகாநாடுகளுக்கும் முக்கிய பேதம் ஒன்றுண்டு. பழையவற்றில் போராட்டத்திற்கான ஆவேசமூட்டும் முஸ்தீபுகளும், தீர்மானங்களும், கோஷங்களும் நிறைந்திருந்ததுண்டு. ஆனால் ஜெயபுரி விழா அமைதியும், ஆழமும் நிறைந்து ஆக்க வேலைக்கு அடிகோலும் மனப்பாங்கை வெளியிட்டிருக்கிறது. இது இயற்கையே. அந்நியன் ஆதிக்கம் நம்மவரை அடக்கி வைத்திருந்த காலத்து ஆவேசமூட்டும் வகையில் கோஷங்கள் தேவைப்பட்டன. உணர்ச்சியைக் கிளப்பும் ஊங்காரம் அவசியமாயிருந்தது. இன்று நம்மவரே நாட்டின் அரசியலை ஏற்ற பின்னர் ஆக்க வேலைக்கான ஆழ்ந்த சிந்தனையும், அமைதியும் தான் இன்றியமையாதனவாகி விட்டன.

ஜெயபுரித் திருவிழா இந்த உண்மைகளை எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஜெயபுரி காங்கிரசில் இந்தியா சம்மந்தமான எல்லாவித பிரச்னைகளும் பரிசீலிக்கப்பட்டன. இவற்றை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒன்று வெளிநாட்டு விவகாரம்; மற்றது உள்நாட்டு விஷயம்.

வெளிநாட்டு விவகாரங்களில் முதன்மைபெற்ற விஷயம் காமன் வெல்த் உறவு. இந்தியா பிரிட்டிஷ் டொமினியனாக இனி இருக்காதென்றும், ஆனாலும் நாட்டு நலனுக்குத் தேவையான நெருங்கிய தொடர்பு நீடிக்கப்படும் என்றும் ஒரு தீர்மானம் கூறியிருக்கிறது. பண்டித நேருவின் விளக்கம் இதன் அடிப்படையைத் தெளிவாக விளக்கியிருக்கிறது. இந்தியாவுக்குக் குந்தகமான முறையிலோ, கௌரவ பங்கமான முறையிலோ வெளித்தொடர்புகள் கூடாதென்பது உண்மைதான். ஆனால் பிரிட்டனுடனும், மற்றைய டொமினியன் நாடுகளுடனும் இந்தியா நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். வெறும் அர்த்தமற்ற புரட்சிக் கூச்சல் போடுவோர்கள் நிர்வாக சம்மந்தமான இந்த உண்மையை உணரவேண்டும். இந்தத் தீர்மானத்துக்கே பிரிட்டனில் கசப்பான எதிரொலி கிடைத்திருக்கிறதென்றால் இதன் வலிமையை நம்மவர் உணர இதனிலும் பெரிய விளக்கம் தேவையில்லை.

இந்தியாவில் இருக்கும் பிரெஞ்சு, போர்த்துக்கீசிய ஆதிக்கங்களின் நோய்ப்பட்ட மிகுதிகளைத் துடைத்தெறியவும் தீர்மானம் ஒன்றின்மூலம் உறுதி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உறுதியூடே இதற்கான வழி வகைகள் வகுக்கும் விஷயத்தில் ஆவேசமின்றி நடந்துகொள்ள வேண்டுமென்ற எச்சரிக்கையும் ஒலித்திருப்பது கவனிக்கத்தக்கது. மற்றும் கடல் கடந்த இந்தியர் சம்பந்தமாகவும், வெளிநாட்டு ஸ்தானீக உறவுகள் பற்றியும் உபயோகமான பரிசீலனை நடைபெற்றிருக்கிறது.

ஃ ஃ ஃ

உள்நாட்டு விஷயங்களில் முதன்மைபெற்றது உற்பத்திப் பெருக்கம், தொழில் பிரச்னைகள் ஆகியவையே. நாட்டில் இன்று உடைமைகள் சம்பந்தமாகவே பெரிய மனக்கிளர்ச்சி சோஷயலிஸ்ட் கம்யூனிஸ்ட் என்ற தத்துவரீதியான கட்சி வடிவில் தோன்றியிருக்கிறது. தொழில் வர்க்கத்தில் இன்று காணப்படும் அதிர்ச்சி மிகத் தெளிவானதே.

லட்சிய சமுதாய அமைப்பில் உடைமை விஷயமே அடிப்படையாக இருக்குமானாலும் இன்றைய உடனடிப்பிரச்னை உற்பத்தியும், விநியோகமுமேயாகும். உண்மையில் உற்பத்திக்கும், நியாயமான விநியோகத்துக்கும் இடைஞ்சலின்றி இன்றைய சமுதாய அமைப்பையே சீரமைத்துக் கொள்ள முடியுமானால் அதுவே பெரிது. இல்லையானால் ஊதியம் எவ்வளவு கிடைத்தாலும் வாழ்க்கைத்தரம் சீர்ப்பட முடியாது. இது ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம்.

உடைமைகள் பற்றிக் கேள்வி கிளம்புவதே விநியோகம் சரியின்மையால் தான். நமது உடைமைகளுக்கு இன்று சரியான உருவம் இல்லை. உற்பத்திப் பெருக்கத்தின் மூலமே உடைமைகளின் பலத்தை ஸ்தாபிக்கமுடியும். உற்பத்தியைப்பெருக்க அதில் ஈடுபடும் மக்களுக்கு நியாயமான விநியோக வாக்குறுதியின் மூலமே ஊக்கமளிக்க முடியும். இந்த பிரச்னைகளை ஜெயபுரி காங்கிரஸ் பரிசீலனை செய்திருக்கிறது.

ஃ ஃ ஃ

முதலாளித்வ முறையில் தொழில்களும் உற்பத்திச்சாலைகளும் இயங்கும் வரையில், முதலாளிகளுக்கு லாபம் கிடைப்பதைப்பற்றி வருந்திப்பயனில்லை. இந்த முறையை மாற்றி அமைப்

(12-ம் பக்கம் பார்க்க)

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்
பார்த்தவர்கள் திரும்பத்திரும்ப பார்க்கிறார்கள்!
நீங்கள்மட்டும் ஏன்?
27-12-48 முதல் 9-வது வாரமாக நடைபெறும்
ஜுபிடர் மோகினி தமிழ் படம்
V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை, லலிதா, பத்மினி நடித்தது
தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு



அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

வாணிப அனுபவங்கள்

அளப்பரும் விஞ்ஞான ஆற்றல் ஊறிக்கொண்டிருந்த இளம் உள்ளத்தில் சாதாரண மெகானிஸ ஞானம் மட்டும் ஆவலைத் தணித்து விடுமா என்ன? இடையில் பொருளீட்டும் முயற்சி தலைதூக்கலாயிற்று.

“தாங்கள் பொருளீட்ட ஆரம்பித்தது எந்தத் துறையில்?” என்று கேட்டேன். அவர் கூறினார்.

“கோவை ஜில்லாவிலே வியாபாரத்துக்கு முதல் கவர்ச்சி சாதாரணமாகவே பஞ்சு வியாபாரம்தான். நானும் அதில்தான் ஆரம்பித்தேன். மிகவும் நெளிவு சுளிவு நிறைந்த வியாபாரம் அது. சில நூறு ரூபாய்களை வைத்துக்கொண்டு நானும் பஞ்சு வாங்கி விற்க ஆரம்பித்தேன். ஒரு நொடியில் ரூபாயெல்லாம் காணாமல் போய்விடும். மறுபடியும் கடன் வாங்கிப் போடுவேன். கொஞ்சம் லாபம் வருவதுபோல்இருக்கும். கடைசியில் முடிவு நஷ்டம்தான். என்றாலும் ஒரு கை பார்க்காமல் விடுவதில்லையென்ற பிடிவாதம் மாத்திரம் குறைவில்லை. இதிலெல்லாம் அதிர்ஷ்டம் வேண்டுமென்று அனுபவசாலிகள் சொல்லுவார்கள். அந்த அதிர்ஷ்டம் என்பது கருப்பா சிவப்பா என்று பார்த்துவிடவேண்டும் என்று துடித்தேன். எனவே துரதிர்ஷ்டங்களைக் கண்டு அஞ்சாமல் எதிர்த்தேன்.

“எதையும் அலட்சியமாக ஒதுக்காமல், எதையும் மகத்தானதென்று கருதி ஒதுங்காமல் நான் என் வியாபாரத் துறையில் முழு மனதுடன் ஈடுபட்டேன். சிங்காநல்லூரில் பஞ்சு அரைக்கும் தொழிற்சாலையொன்றில் சில காலம் வேலைக்கிருந்தேன். சோறு இனும். அத்துடன் மாதம் பனிரண்டு ரூபாய் சம்பளமும் கொடுத்தார்கள். ஆனால் சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டுமென்ற ஆவலில் அதைவிட்டும் விலகிவிட்டேன்.

“திருப்பூரில் சொந்தத்தில் ஒரு ஜின்னிங் பாக்டரி ஆரம்பிக்க முயற்சித்துப் பணம் சேகரித்து விட்டேன். சுமார் 17 ஆயிரம் ரூபாய்கள் முதலீட்டில் தொடங்கிய இந்த வியாபாரம் முதல் மகாயுத்தம் நடைபெற்ற அந்தக்காலத்துப் பொருளாதார வர்த்தகச் சூழ்நிலையின் விளைவாக ஒருலக்ஷத்து ஐம்பதினாயிர ரூபாயாக உருவெடுத்தது. இதுதான் வர்த்தகத் துறையில் நான் பளிச்சென்று கண்டெடுத்த முதல் வெற்றி.”

50 வருடங்களுக்கு முன் ஆபீஸ் பையன் இன்று லண்டன் மேயர்!

ஐம்பது வருடங்களுக்கு முன்னால் குறுகுறுவென்ற தோற்றமுடைய சிறுவன் லண்டன் நகரத்திலுள்ள ஒரு ‘ஸ்டாக்ப்ரோக்கர்’ (பங்கு) கம்பெனிக்கு வேலைக்காகச் சென்றான். அங்கு அவனுக்கு ஆபீஸ் பையன்வேலை கொடுக்கப்பட்டது. இச் சிறுவன் அந்தக் கம்பெனியில் நெற்றி வியர்வை நிலத்தில் விழுமாறு உழைத்து நல்ல பெயருடன் புகழின் முன்னணிக்கு வரலானான். இன்று அந்த ஆபீஸ் பையன், தற்போது சர் ஜார்ஜ் ஆல்வின்தான், லண்டனின் புது மேயராவார். இன்றும் அவர் அதே கம்பெனியில்தான் வேலை செய்கிறார். அக் கம்பெனியின் முக்கிய பங்குதாரர்களில் சர் ஜார்ஜ் ஆல்வினும் ஒருவர்.

கோவையில் இப்போது நாயுடு ஒரு பிரமுகர். பொதுஜன சேவையிலும் இவருடைய கவனம் திரும்பியதன் காரணமாக, நாட்டின் பல்வேறு இடங்களில் தொலை தூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்கெல்லாம் சென்று வர ஆரம்பித்தார்.

பல இடங்களுக்கும் சுற்றித் திரிந்ததனாலோ அனுபவத்தின் மிகுதியாலோ கோவை நகரம் இப்போதெல்லாம் மிகச் சிறு இடமாகக் காணப்பட்டது போலும். தனது வாணிபத் துறை முயற்சிகளுக்குப் பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் நல்ல பயன் கிடைக்குமென்ற எண்ணமும் நம்பிக்கையும் அவருக்கு ஏற்பட்டது. வடக்கேயிருந்து பஞ்சு வியாபாரிகள் கோவைப் பக்கங்களில் வந்திருந்து ஏராளமான பணத்தை வாரி இறைத்துப் பஞ்சு வியாபாரம் செய்வதைக் கண்டதனால் ஏற்பட்ட எதிரொலியாக இருக்கலாம். நினைத்த திட்டத்தை நிறைவேற்றும் அவருடைய ஊக்கம் பம்பாய்க்கு அவரைத் தள்ளிக் கொண்டு போய்ச் சேர்த்தது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல் பம்பாய் நகரவாசமும் முகமறியாத புது மனிதர்களிடையே தொடங்கிய வர்த்தகமும், அவர் சம்பாதித்து வைத்திருந்த சுமார் ஒன்றரை லட்ச ரூபாயையும் ஏப்பமிட்டுவிட்டது தான் கண்ட பலன். கையில் காலணா இல்லாமல் திரும்பி வந்த நாயுடுவுக்குக் கோவையிலேயே மீண்டும் எங்காவது வேலைக்கமர்ந்துகொண்டாலே போதும் என்று தோன்றியிருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் வர்த்தகம் தொடங்க நாய்க்காசு கூட முதல் கண்டுபிடிக்க முடியுமென்று தோன்றவில்லை.

வர்த்தகத்துறையில் ஏற்பட்ட பொருளாதார லாபநஷ்டங்கள் எப்படியிருப்பினும், இவருடைய நாணயமும் ஒழுங்கும் உயர்ந்து அந்தத் துறையில் நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுக்கத் தவறவில்லை. ஒன்றரை லட்ச ரூபாய் வரை சம்பாதித்து அதைப் போக்கடித்தும் விட்ட பிறகு அவரிடம் மிஞ்சியிருந்தது இந்தக் கீர்த்தி ஒன்றுதான். வயதான தந்தையார் குமாரன் தனது அருகில் இருக்கவேண்டுமென்று விரும்பினார். ஆயினும் துரைசாமி அங்கு செல்லவில்லை.

சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற பிரபல வியாபாரி, ஒரு அந்நிய நாட்டார், கோவையில் அச்சமயம் வர்த்தகம் புரிந்துவந்தார். ரப்பர், காப்பி, தேயிலை தோட்டங்கள், பெரிய மில் ஒன்று இவற்றுடன் மோட்டார் துறையிலும் ஈடுபட்டிருந்தார் அவர். அவரிடம் சென்று மோட்டார் மெகானிஸ்டாகத் தன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார் துரைசாமி. இவரைப்பற்றி ஓரளவு அறிந்திருந்த **ஸ்டேன்ஸ் துரை** விசால நோக்கம் படைத்தவர். அவர் துரைசாமியைத் தன்னிடம் வேலைக்கமர்த்திக்கொள்ள விரும்பவில்லை. ஆற்றல் மிக்க இளைஞர் இப்படிச் சோர்ந்துவிடுவதை அவர் ஏற்றுக்கொள்ளாமல், இந்தத் தடவை பஞ்சு வியாபாரத்தை விட்டுவிட்டு வேறு துறையொன்றில் முழு மனதுடன் ஈடுபட்டால் வெற்றியடையலாமென்று ஆலோசனை கூறி துரைசாமியை உற்சாகப்படுத்தினார்.

ஸ்டேன்ஸ் துரை வெறும் வாசாகைங்கர்யத்துடன் துரைசாமியை விடை கொடுத்தனுப்பிவிடவில்லை. நாலாயிரரூபாய் பணமும் கடனைக் கொடுத்து அதைக்கொண்டு, துரைசாமிக்குப் பிடித்தமான தொழிலாக மோட்டார் ஒன்றை வாங்கிப் பிரயாணிகளின் போக்கு வரத்துக்கு நடத்தும்படி ஆலோசனை கூறினார். மேற்கொண்டு நாலாயிரம் எப்படியோ கடன் வாங்கிப் போட்டு புதுத்துறையில் இறங்க முயற்சித்துக் கொண்டிருந்தார் **“கை முதலை ஒரு பாதி தொழிலில் ஈடுபடுத்தி மறுபாதியை அவசர வசதிகளுக்காக இருப்பு வைத்துக்கொள்வது எந்தத் தொழிலிலும் ஒரு அடிப்படையான கொள்கையாக இருக்கவேண்டும்”** என்ற உபதேசமும் துரைசாமிக்குக் கிடைத்தது. இந்தப் பொருளாதார தத்துவத்தை துரைசாமிக்கு உபதேசித்த பெரியவர் காலம்சென்ற திவான்பகதூர் சோமசுந்தரம் செட்டியார்.

இந்த உபதேசமும் ஸ்டேன்ஸ் துரையின் உதவியும் துரைசாமியின் உற்சாகத்திற்கு உறுதுணையாக இருக்கின்றன. 1920-ம் ஆண்டில் முதன் முதலாக மோட்டார் போக்கு வரத்துத் துறையில் இறங்கினார் துரைசாமி என்னும் நமது ஜி. டி. நாயுடு.

விரைவில் பொள்ளாச்சிக்கும் பழனிக்குமிடையில் நாயுடுவின் முதல் மோட்டார்வண்டி பிரயாணிகளின் போக்கு வரத்துக்கு ஓடிக்கொண்டிருந்தது. சுமார் 40 மைல் துரைசாமியே சாரதியாக அமர்ந்து ஓட்டிக்கொண்டிருந்தார்.

சாதாரண பஸ் டிரைவராக இப்படி ஆரம்பித்த நாயுடுவின் புதுவாழ்வு, இன்று இந்தியாவிலேயே மிகப் பெரும் அளவில் கணக்கற்ற மோட்டார் வண்டிகளை ஸ்தாபன ரீதியாகப் புது விஞ்ஞான முறைகளில் வைத்து நடத்திய **மோட்டார் மன்னன்** என்ற கீர்த்திக்கு அவரை உயர்த்தியது. இந்தியாவின் மோட்டார் துறையில் பேரறிஞர் என்று இவரை அன்னிய நாட்டாருங்கூட இன்று உணர்ந்து மதிக்கிறார்கள்.

(தொடரும்)

சுதந்திர இந்தியாவில் தேசீய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரிகளுக்கு சப்ளை செய்யப்படும்.

பாபு இண்டஸ்ட்ரீஸ்

டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சினாப்பள்ளி.

பெங்களூர் காஞ்சிவரம் பட்டு சேலைகள் பனாஸ் ஜரிகை புட்டா தார்பானு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

SLATE MANUFACTURERS & FANCY PIECE GOODS & SILK CLOTH MERCHANTS

தமிழில் கலைக் களஞ்சியம்

மனிதன் குறைந்த பட்சம் ஐநூறு ஆண்டுகள் ஒழுங்கான முறையில் வாழ்ந்தால் தான் தன் குலத்தின் குறைகளை அகற்றி, சீர்திருத்திக்கொண்டு உருப்படலாம் என்பது ஷாவின் கருத்து. மனித குலத்தை சீர்திருத்தம் செய்யும் வேலையைப் போலத்தான் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் வேலையும். களஞ்சியம் தயாரிப்பது எவ்வளவு கடினமான வேலை என்பதைக் குறிப்பிடவே நான் இப்படி உவமைப் படுத்தினேன்.

அவசியத்தை உணர்ந்த ஆத்ம வேகம் இருந்தால் ஐநூறு வருடங்கள் வாழ்வதும், களஞ்சியம் தயாரிப்பதும் அசாத்தியமான காரியங்களல்ல. உயிர்ச் சக்தியில் தளராத நம்பிக்கையுடையோருக்கு அசாத்தியமான காரியங்களே கிடையாது.

தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தமிழ்க் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் வேலையில் கொண்டு செலுத்தும் உத்வேகம் வரவேற்கத்தக்கது.

இந்தியாவிலேயே நவீன காலத்தில் இத்தகைய களஞ்சியம் தமிழில் தான் முதலாவதாகத் தோன்றப்போகிறது என்ற உண்மை நம்மைப் பெருமையடையச் செய்கிறது.

உலகம் இன்றுவரை கண்டிருக்கும் உண்மைகளும், சேர்த்திருக்கும் சேதிகளும் கணக்கில் சுலபமாக அடக்கிவிட முடியாதவை. இவற்றின் முழு விபரங்களையும் நாம் பற்றிவிட்டால் கூட ஒழுங்கு படுத்திக் கோர்ப்பது ரொம்பக் கடினமானது. இப்படி ஒழுங்கு படுத்துவதிலும், பகுதிகளாகப் பிரிப்பதிலும் ஏராளமான வழிகளும், நோக்குகளும் உண்டு. இவற்றிற் சிறந்ததைப் பொறுக்கி எடுக்க வேண்டும்.

டார்வின் தோன்றி பரிணாம தத்துவம் பற்றிய ஏராளமான சாட்சியங்களைச் சேகரித்துக் கொடுப்பதற்கு முன்னால், உயிரியக்கத் துறையில் பதினெட்டாம் நூற்றாண்டில் எண்பது ஆண்டுகள் வாழ்ந்த பபான் (Buffon) என்பார் தமது வாழ்க்கை முழுவதையும் இயற்கையைச் சோதித்து, சேதித்து, தமது 'இயற்கை வரலாறு' (Histoire Naturelle) என்னும் பிரசித்திபெற்ற புத்தகத்தை ஐரோப்பாவுக்கு முன் சமர்ப்பித்தார். பபானது புத்தகம் சிறு குழந்தைகள் முதல், பேரறிஞர் வரையில் எல்லோரையும் கவர்ந்து ஆட்கொண்டது.

இந்த மகத்தான சரிதத்தை உருவாக்குவதில் வெறும் சேதிச் சேகரிப்பு மாத்திரம் போதவில்லை. அவற்றை ஒழுங்கு படுத்துவதுடன், மேற்கொண்டு தத்துவக் கோட்பாடுகள் உருவாக்கும் திறனும் தேவையாயிருந்தது. கண்யமும், பொறுமையும், விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சியும், தளராத நம்பிக்கையும் பபான் அவர்களது உள்ள அமைப்பில் இடங்கொண்டிருந்ததால் தான் இந்த வேலை சாத்தியமாயிற்று.

பபான் தனி ஒருவர். இயற்கை வரலாறு தனியொரு துறை. இதற்கே ஒரு புருஷாயுஸ் தேவைப்பட்டதென்றால் நாம் வரைத்திருக்கும் எத்தனையோ துறை சாத்திரங்கள் பற்றிய சேதிகளைத் தனையும் சேர்த்துக் கொடுப்பதென்றால் எத்தனை புருஷாயுஸ்களும், நிபுணத்துவமும் தேவையென்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இது வளர்ந்து கொண்டே போகும் முடிவற்ற தொண்டு. இதை ஆற்றுவதில் எடுத்துக்கொள்ள வேண்டிய சிரத்தை மகத்தானது.

ஃ ஃ ஃ

நல்ல வேளையாக உலகத்திலேயே முதலாவதாகக் களஞ்சியம் தயாரிக்கும் பொறுப்பு நமக்கு ஏற்படவில்லை. நமக்கு முன்னே பெரிய முயற்சிகள் நடந்து சில நல்ல வெற்றி கண்டிருக்கின்றன. ஆங்கில பிரெஞ்சு களஞ்சியங்கள் நமக்கு முன்னே கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன. பிரெஞ்சு களஞ்சியத்தில் கூட ஆங்கிலத்தில் உள்ள விஸ்தாரம் இல்லை என்பதனால் ஆங்கிலக் களஞ்சியமே இன்று தனிப்பெருமையுடன் திகழ்கிறது.

டாக்டர் ஜான்சன் ஆங்கிலத்தில் முதல் அகராதி தயாரிக்கும் போது இருந்த நிலையில் இன்று நாம் இருக்கிறோம், தமிழ்க் களஞ்சிய விஷயத்தில். அவரது அகராதியில் இருந்த குறைகள் நமது முதல் களஞ்சியத்திலும் இருந்தால் நாம் அதற்காக அயர்வுற வேண்டியதில்லை. காலப் போக்கில் மேன்மேலும் சீர்திருத்தம் ஏற்பட்டு நமது களஞ்சியம் மெருகேறி நன்னிலை யெய்தும்.

எத்துறையிலும் தீர்ப்பு நிலை (Perfection) என்பது ஒன்று இருக்க முடியாதாகையால் சில எல்லைகள் வகுத்துக்கொண்டு அவற்றுள் கூடுமானவரை முழுமையெய்த முயற்சித்தால் பின்னவருக்கு வேலை எளிதாகும்.

தமிழ்க் களஞ்சியம் தமிழ் மொழியின் சரிதம், தமிழில் பல் துறைகளிலும் தோன்றியிருக்கும் நூல்கள், தமிழர் வாழ்வின் பரிணாமம், தமிழ் நாட்டின் பூகோள, இயற்கைப் பாங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலிய பலவற்றையும் விஸ்தாரமாகத் திரட்டுவதை முதல் வேலையாகச் செய்தால் ஏனையவற்றைப் பின்னர் தொடர்வது எளிதாயிருக்கும்.

உலக சரித்திரமும், உலக விஞ்ஞானமும், உலகமதங்களும் நமக்குப் போதுமான அளவு விரிவாக ஆங்கிலத்தின் வாயிலாக உருவகப் பட்டிருக்கின்றன. எனவே அவற்றின் உதவி நமக்கு மகத்தானதாயிருக்கும்; சுலபமாகக் கிடைக்கும். ஒழுங்குடன் அவை நம் முன்னே விரிந்து கிடக்கின்றன.

ஃ ஃ ஃ

சென்ற டிசம்பர் பன்னிரண்டாம் தேதியன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் வெளியிட்டிருக்கும் கலைக்களஞ்சிய மாதிரிப் பிரதியில் பல்வேறு அறிவுத் துறைகளைச் சார்ந்த குறிப்புகள் அடங்கியிருக்கின்றன. இம் மாதிரிப்பிரதியின் அமைப்பு நம்பிக்கை யூட்டுவதாயிருக்கிறது.

தமிழ்க் கலைக் களஞ்சியம் சுமார் 750 பக்கங்கள்கொண்ட பத்து அல்லது பன்னிரண்டு ஏடுகங்களாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எல்லையைக் கடக்கவேண்டிய தேவை ஏற்படலாமென்றே நினைக்கிறோம். தனிப்புத்தகம் 25 ரூபாயும், எல்லாவற்றிற்கும் சேர்த்து 250 ரூபாயும் விலை வைக்க உத்தேசித்திருக்கிறார்கள். தமிழ் மக்களிடமிருந்து இதற்கு நல்ல ஆதரவிருக்குமென்றே எதிர்பார்க்கிறோம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் பெரு முயற்சியுடன் சொட்டுச் சொட்டாகச் சேகரித்துச் சேர்த்துக் கொடுக்கும் தேனை ருசிக்க 250 ரூபாய் ஒருபெரிய கட்டணமாகி விடாது.

ஆங்கில அறிவுக் களஞ்சியத்தை "லண்டன் டைம்ஸ்" பத்து ஆண்டுகள் சேர்ந்தாற் போல் பிரசாரம் செய்து மக்களுக்குக் கவர்ச்சியூட்ட வேண்டியிருந்தது. இந்த அவசியம் தமிழ் மக்கள் விஷயத்தில் நேராதென்றே நம்புகிறோம்.

களஞ்சியத்துக்குக் கட்டணம் செலுத்த விரும்புவோரும், விவரமறிய விரும்புவோரும் மானேஜர், கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக்கழகம், சர்வகலாசாலைக் கட்டிடம் சேப்பாக்கம் சென்னை 5 என்ற விலாசத்தைக் குறித்துக்கொள்ளலாம்.

✱

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப் படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோக முள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவிலுள் தயாரிப்பு, வயறுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயிற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுகள் குடல் கொந்தளிப்பு மேக அம்சத்தினால் வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

(தபால் செலவு தனி)

Dr. R. P. சாரதி,
மகாத்மாகாந்தி
சித்த வைத்யசாலை
தர்மாராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

ப்ரீ இந்தியா

(காங்கிரஸ் மலர்)

(ஆசிரியர் இ. ஆர். கோவிந்தன், 53, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, மவுண்டு ரோடு, மதருஸ். விலை அணா 12.)

சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கில வாரப்பத்திரிகையான 'ப்ரீ இந்தியா'வின் காங்கிரஸ் விசேஷ மலர் விஷயச் சிறப்பும், படப்பொலிவும் பெற்று இனிமையாகத் திகழ்கிறது. பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர் கே. ராமராவ்காங்கிரஸ் ராஷ்டிரபதி பட்டாபியைப்பற்றி எழுதியிருக்கும் குணசித்திர, வரலாற்றுக் குறிப்பு முதலிடம் பெறுகிறது. காங்கிரசின் அமைப்பு, சரித்திரம் பற்றிய வரலாறுகளும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. கோவைத் தொழில் நிபுணரும், விஞ்ஞானியுமான ஜி. டி. நாயுடு அவர்களது பேட்டியில் உலகப் பிரபலஸ்தர்களைப் புகைப்படம் பிடிக்கும் அனுபவங்கள் பற்றிய சித்திரக் கட்டுரை குறிப்பிடத் தக்கது. தேசீய காங்கிரஸின் பழைய ராஷ்டிரபதிகளது படங்கள் வர்ணக் குழைவில் வார்த்தெடுக்கப்பட்டு ஆறுபக்கங்கள் அடங்கியிருக்கின்றன. மேலும் காமராஜ், சத்யமூர்த்தி, ஆந்திர கேசரி பிரகாசம்காரு, டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையார், எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார், சி. விஜயராகவசாரியார் ஆகியோரது முழுப் பக்கப் படங்கள் விசேஷக் கவர்ச்சிகொண்டிருக்கின்றன. ஏராளமான புகைப் படங்களும் ஆங்காங்கு பரவியிருக்கின்றன. 64 பக்கங்கள் கொண்ட இம்மலர் விஷயச் சிறப்பும், சித்திரப் பொலிவும் கொண்டு கவர்ச்சிகரமாய் அமைந்திருக்கிறது

தமிழ் இசை மாநாடு

சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் சார்பில் ஆறுவது தமிழிசை மாநாடு 23—12—48 தேதியில் பிரதமர் ரெட்டியாரால் திறந்துவைக்கப்பட்டது. 23-12-48 முதல் 2-1-49 முடிய நிறைய நடன, இசைக் கச்சேரிகளும் மற்றும் பல கலை விழாக்களும் நடைபெறுகின்றன

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 26—12—48

தன்னல மறுப்பு

ஜெயபுரி காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களில் தேச மக்களுக்குப் பெரும் ஆறுதல் அளிப்பது **ஒழுக்கம்** பற்றிய தீர்மானம் தான்.

“மாகாணம் பூராவும் நூற்றுக்கணக்கான குண்டர்களைக் கட்டவிழ்த்துவிட்டால் மக்கள் எந்தக் காட்டில் சென்று குடியேறுவது?” என்று சோகமும் அவமானமும் கலந்த உணர்ச்சியுடன் காந்தியடிகளுக்குக் கொண்டா வெங்கடப்பய்யா எழுதிய கடிதம் அனைவருக்கும் நினைவிருக்கும். குண்டர்கள் என்று கொண்டா குறிப்பிட்டது யாரை என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அதிகாரம் கிடைத்தவுடனே எம். எல். ஏ-க்கள், ஆங்காங்கு ஜில்லாக்களில் அட்டகாஸம் புரிய ஆரம்பித்துவிட்டது மர்மமான செய்தியல்ல. தியாகிகளுக்கு நிலம் கொடுப்பதிலிருந்து, மோட்டார் போக்குவரத்துக்கு அனுமதி கொடுப்பது முடிய, எல்லா கமிட்டிகளிலும் யாராவது எம். எல். ஏ. இருக்கத்தான் செய்கிறார். ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களும் சம அந்தஸ்தில் வளைய வரத்தான் செய்கிறார்கள். தேசத் தொண்டர்கள் இப்படிப் பல பொறுப்புக்களிலும் இருப்பது நன்மையான காரியம் தான். ஆனால் அந்த நன்மை இவர்கள் தேசத் தொண்டர்களாக இருந்தால் தானே கிட்டும்? அற்பர்களும், சுயநலமிகளும் கூட தேச பக்திப் போர்வையில் பதவிகளில் எப்படியோ புகுந்துவிட்டால் அவர்களைக் குண்டர்கள் என்று கொண்டா குறிப்பிடுவதில் தவறென்ன?

வேலியே பயிரை அழிப்பது போல — ஆளவந்த அன்புக்கரமே நச்சு நகத்தை நீட்டி மக்களின் குடலை உருவி மாலையிட்டுக் கூத்திட ஆரம்பித்தது போல—நாட்டு நிலை இருந்தால் என்ன ஆகும்? நாம் வளர்த்த—ரத்தம் சிந்தி, பட்டினிகிடந்து, இருட்சிறையில் எண்ணற்ற காலம் தவமிருந்து வளர்த்த—காங்கிரஸ் ஸ்தாபனம் தான் உயிருடன் இருக்குமா?

இந்த வேதனை எண்ணற்ற இந்தியர்களின் இதயத்தின் சோகக் குரலாக எழுந்து ஜெயபுரி காங்கிரஸ் பந்தலில் ஆராய்ச்சிக்கும் அழுத்தமான தீர்மானத்திற்கும் கூட பாத்திரமானது காங்கிரஸின் பெருமையை உயர்த்தவே செய்கிறது.

கட்டுப்பாட்டுப் பொருள்களின் வியாபார லைசென்ஸுகள் சாதாரணப் பிரஜைக்குக் கிடைப்பதில்லை. பொருள் உபயோக அனுமதிக்கும் கூட காங்கிரஸ் எம். எல். ஏ. தயவு வேண்டியிருக்கிறது. காரணம் காங்கிரஸ் அதிகாரத்தில் இருக்கும் கட்சி. அரசாங்க உத்யோகஸ்தர்கள் அடங்கிப்போகா விட்டால் ஆபத்து.

இந்த நிலை ஏற்பட்டதற்குரிய பொறுப்பு மந்திரி சபைகளின் திறமையின்மையாலோ, எச்சரிக்கைக் குறைவாலோ என்றுகருதுவதற்கு இடமில்லையென்று சொல்லமுடியாது.

இந்தத்தீர்மானத்தில், மந்திரிகள் பற்றிய வாசகம் சேர்ந்திருந்ததற்கு, மக்களின் உள்ளக் குமுறல்தான் காரணமாக இருக்க வேண்டும். நேரு இந்த வாசகத்தை எதிர்த்து அதைத் திருத்த விழைந்தார் அவரை முன்னிட்டு அது சீர்திருத்தமும் பெற்று நிறைவேறியது.

நேருவிடமுள்ள மதிப்பும் நம்பிக்கையுமே தீர்மானத்தில் மந்திரிகளைப்பற்றிய வாசகம் நீக்கப்படுவதற்குக் காரணம். ஆனால் உண்மை நிலையை இது எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட்டு விடவில்லை. எம் எல். ஏ. க்களைப்பற்றி வாசகம் தீர்மானத்தில் விளக்கமாக இருக்கிறது.

எம். எல். ஏ. க்கள்சுயநலமிகளாகிவிட்டால் அவர்கள் ஆதரவு பெற்று அரசாள வேண்டிய மந்திரிகள் சுயேச்சையுடன் நேர்மையை நிலை நிறுத்திவிட முடியுமா?

காங்கிரஸ் காரர்கள் தாங்களாகவே தன்னல மறுப்புச் செய்து கொண்டாலன்றி இப்போதுள்ள அமைப்பில் அநீதிகள் குறைய வழியில்லை. ஆனால் காங்கிரஸின் பெருமை தேயவும் கவர்ச்சியும் புரட்சியுமிக்க ஏனைய கோஷங்களில் வேறு அரசியல் கொள்கைகள் பரவவும் வசதியுண்டாகிவிடும். தேச நிர்வாகத்தில் கவலையுடன் வந்த சுதந்திரத்தை வாழ்விக்கவும் விரும்பும் காங்கிரஸ்காரர்கள், அவர்கள் கமிட்டித்தலைவர்களானாலும், எம். எல். ஏ. அல்லது மந்திரிகளானாலும் தங்கள் **தியாகப் பண்பை** இழந்து விடவோ, **மறந்து** விடவோ, மிதமாகக்குறைத்துக் கொண்டு விடவோ செய்வது பெரிய வீழ்ச்சிக்கே குழி பறித்துக்கொள்வதாகும்.

பொது ஸ்தாபனங்களிலும் சர்க்காரின் நிர்வாக யந்திர இயக்கத்திற்குத் துணைபுரியும் கமிட்டிகளிலும் பொதுஜனப் பிரதிநிதிகளின் தொடர்பு இருக்க வேண்டுமென்று கருதியே எல்லா கமிட்டிகளிலும் எம். எல். ஏ. க்களை நியமிக்கலாமென்று தோன்றியிருக்கவேண்டும். ஆனால் அந்தப்பொறுப்புக்களை நெருப்பாகப் பாவித்துப் பழகும் தன்னடக்கமும் சேவை உணர்ச்சியும் எம். எல் ஏக்களுக்குக் குறைந்துபோய் விடுமென்றால்—அதன் மூலம் அவர்கள் அதிகார வர்க்கத்தைப் போலவே நெருங்குவதற்கு அச்சம் விளைவிக்கும் புதிய வர்க்கமாக மாறி விடுவதென்றால்—இதைத்தவிர்க்க முடியாதென்றால்—சட்டசபைக் கூட்டங்களின் எல்லையுடன் எம். எல். ஏ. க்களை கட்டுப்படுத்திவிட்டு, உத்யோகப்பற்றற்ற எம்.எல்.ஏ. அல்லாத பிரமுகர்களை கமிட்டிகளில் இருக்கச்செய்யலாம். இந்தத் தொந்தரவே இல்லாமல் எப்போதும் போல் அரசாங்க அதிகாரிகளே தங்கள் கடமைகளைச் செய்ய வழி விட்டு விட்டு மந்திரி சபைகள் அப்பீல் இடமாக இருந்து கொள்ளலாம்.

தில்லித் தலைநகரில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவர்னர் ஜெனரலின் சம்பளத்தை 5 ஆயிரமாகக் குறைத்துவிட்டார்கள். வருமானவரி விலக்கும் கொடுத்துவிட்டார்கள். வரவேற்கத்தக்க விஷயம்தான். அந்தஸ்தையும், அதன் அளவையும், அவசியத்தையும் கவனித்து—ராஜாஜியே சம்பளம் அதிகம் வேண்டாமென்று மறுத்துவிட்டபிறகு—ஏதோ செய்திருப்பதை இல்லையென்று கூறிவிடவில்லை.

அந்தஸ்து பற்றி ஒரு விஷயம். புற அந்தஸ்தைவிட அக அந்தஸ்தின் மூலம் மற்றை நாட்டவர் முன் நம்மைக் குறைத்துக்கொள்ளாமல் மட்டுமல்ல — மிக மிக உயர்த்திக்கொள்ளவும்கூட முடியுமென்பதற்கு நம்மிடை வாழ்ந்து வழிகாட்டிய அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையும் அவருடைய சரித்திரச் சுவடும் காலத்தால் இன்னும் தேய்ந்துவிடவில்லை யென்பதைத் தேசநாயகர்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் காந்தியடிகள் பிறந்த நாட்டில் ‘அந்தஸ்து வாதம்’ கவர்ச்சிகரமாக இருக்க முடியாது. ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் இருக்காது.

தேசத் தலைவர்களாக இன்று இருப்போர் அன்னியர் கொண்டிருந்தது போன்ற சரண்டல் கொள்கையுடையவர்களாக இருக்கிறார்களென்று கூறவோ, இருக்கக்கூடுமென்ற ஐயுறவோ நமக்குத் துணிவில்லை. அவ்வளவு நன்றி கெட்ட மக்களும் நம்மில் இருக்கமாட்டார்கள்.

தங்கள் சம்பளம் இன்னதென்றுகூட நேருவும் படேலும் தெரிந்து கொண்டிருக்கவில்லையென்ற செய்தியும் பத்திரிகைகளில் பார்த்தோம். தேசத்தின் பொறுப்பை, போராட்ட காலத்தில் போலவே, நிருவாக காலத்திலும் இரவு பகல் என்ற வேற்றுமை காணாது ஏற்று உழைக்கும் நேருபோன்ற தொண்டர்கள் தங்கள் சம்பளத்தை ஒரு பொருட்டாகக் கருதியிருக்கவில்லை என்பதற்கு “என்னுடைய சம்பளம் எவ்வளவு சர்தார்” என்று திரும்பிப் பார்த்துத் தயங்கி நின்ற நேருவின் சௌலப்யம் நமக்கு விளங்கவே செய்கிறது.

அந்தஸ்து வேண்டியதுதான். அதைப் போற்றவும் வேண்டியதுதான். புற அந்தஸ்து அக அந்தஸ்துக்கு ஒரு விளக்கமென்றோ, மூடியென்றோ நம்புவதன் மூலம் நம்மைக் குறைத்துக் கொள்ளவேண்டியதில்லையல்லவா?

‘ருலி’ மறைவு

‘ருலி’ என்ற புனைப்பெயருடன் தமிழ் நாட்டுப்பத்திரிகைத் துறையிலும், சிறுகதை இலக்கியத்துறையிலும் தொண்டாற்றி வந்த திரு. எம். ஜே. ராமலிங்கமவர்கள் சென்ற டிசம்பர் 8-ம் தேதி காலமான சேதி நம்மை வருத்தத்திலாழ்த்துகிறது. 36 வயது கூட சரியாக ஆகவில்லை அவருக்கு.

அந்தக் காலத்து ஆனந்த விகடன் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற ‘ஊமைச்சியின் காதல்’ என்ற சிறுகதை ருலியைத் தமிழ் இலக்கிய உலகில் புகுத்திற்று. ஆனந்த விகடனிலும் ‘ஹனுமான்’ ஆசிரியராகவும் தொண்டாற்றியிருக்கிறார் ‘ருலி’. 1947-ம் ஆண்டின் இறுதியில் ஹனுமானிலிருந்து விலகி ‘கதைமலர்’ என்ற சிறுகதைச் சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தார். அந்நாளில் ‘ஜெயபாரதி’யுடன் ‘ருலி’ ஒன்றியிருந்த காலத்து அவர் எழுதிய எழுத்துக்கள் தேசீய இயக்கத்துக்குத் தமிழ் நாட்டில் தம்மாலான ஊக்கமளித்து வந்தன.

நவீனகாலத் தமிழ் இலக்கியத்திலே ‘ருலி’க்கு ஒரு நல்ல ஸ்தானம் உண்டு.

முகப்பில்

இவ்வார இதழ் முகப்பில் கிறிஸ்துமஸை யொட்டி, ஏசுவின் படம் இடம் பெறுகிறது. ‘காஸ்பல்’ வரலாறுகளின் மூலம், ஏசு பேரறிவுபடைத்த மகாபுருஷனென்று தெரியவரும்.

'ட்வீட்' துணி தயாரிப்பு

மகாத்மா காந்தியடிகள் குடிசைத்தொழிலில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர். நாட்டின் ஏழ்மையைப் போக்கவும், மிகைப்பட்ட உற்பத்தியின் பலனாக ஏற்படும் வேலையின்மைத் திண்டாட்டத்தைத் தவிர்க்கவும் குடிசைத் தொழிலுக்குத்தான் சக்தியுண்டு என்று அவர் கருதினார். அவரது கருத்துகளில் பொதிந்துள்ள உண்மையை அணுகுண்டு சகாப்தத்தில் கடைப்பிடிப்போர் இல்லையானாலும், உணர்ந்துள்ளவர்கள் அறவே இல்லாமல் போய்விடவில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் குடிசைத்தொழில்கள் பல உண்டு. சிறிய அளவில், மனித உழைப்பையே அதிகமாக ஈடுபடுத்தும் இத்தொழில்கள் மனித வர்க்கத்தின் கௌரவத்தைக் காத்து நிற்பன. பிரிட்டனில் "ஸ்காட்டிஷ் ட்வீட்" துணி தயாரிக்கும் தொழில் குடிசைத் தொழில வகையைச் சேர்ந்தது. அது பற்றிய சில சேதிகளைக் கீழே தருகிறோம்.

கைத்தொழிற் புரட்சியின் விளைவாக எழுந்த இயந்திர சகாப்தம் நாட்டின் செல்வத்தையும் சுபிட்சத்தையும் பெரும் அளவில் விஸ்தரிக்க அதிகம் உதவியதென்றாலும் குடிசைத் தொழிலை அது அதிகம் பாதித்து விட்டது. நேர்த்தியான கை வேலைத்திறமைக்கு இன்றும் அதிக தேவை இருக்கத்தான் செய்கின்றது. பொது மக்களும் அவைகளை அதிகம் பாராட்டுகின்றனர். ஆனால் கைகளினால் செய்யப்படும் சரக்குகளின் விலைகள் மிகமிக அதிகமாயிருப்பதால் அதே தரமுள்ளதும் மலிவானதுமான மில்-பொருள்களை மக்கள் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அநேக குடிசைத்தொழில்கள் காலக்கிரமத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. ஆயினும் சில குடிசைத் தொழில்கள் இயந்திரப்போட்டியை எதிர்த்து வெற்றிகரமாகவே சமாளித்து வருகின்றன.

இன்று உலகின் அநேக பகுதிகளில் குடிசைத்தொழில்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் பொருளாதார அமைப்பை ஸ்திரப்படுத்துவதற்கு குடிசைத் தொழில்கள்தான் அஸ்திவாரக்கல் என்பது சகலராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இயந்திரத் துறையில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள பிரிட்டன் அமெரிக்காவை விட, கைத்தொழிலில் அதிகம் பின் தங்கியிருக்கும் ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் தான் குடிசைத் தொழில்கள் வளர்ச்சியடைய சூழ்நிலைகள் அநுகூலமாக இருக்கின்றன. இயந்திரத்தொழில்களில் வெகு தூரம் அபிவிருத்தியடைந்துள்ள கிரேட் பிரிட்டனில் கூட இன்று சில குடிசைத்தொழில்கள் அதிகம் வளர்ச்சியுற்று வருகின்றன.

ஒரு கைவினைஞன் தான் தயாரிக்கும் பொருளுக்கு அளிக்கும் ஜீவ இலட்சணத்தை எந்த இயந்திரத்திடமிருந்தும் பெறமுடியாது. கையினால் செய்யப்படும் பொருள்களுக்கு இன்று இருந்து வரும் கிராக்கிக்கு இதுதான் முக்கிய காரணம். இவ்விதம் உலக முழுவதிலும் நேர்த்தியான கைத்திறமை என்று பாராட்டப்படுவதும் அதிக தேவையாயிருந்து வருவதுமான பொருள்களில் கையினால் நெய்யப்பட்ட 'ஸ்காட்டிஷ் ட்வீட்' கம்பளித்துண்டும் ஒன்றாகும். இத்தொழில் இன்றும் ஸ்காட்லாந்தின் ஏகபோக உரிமையாக இருந்து வருகிறது. எனினும் 1938 வருடம் எடின்பரோவை விட்டு தமது மனைவியுடன் போவிடிரேஸி என்ற ஆங்கில நகரில் குடியேறியுள்ள 42 வயதான ஆங்கஸ் லி-ஸ்டர் என்ற ஸ்காட்லாந்து வாசி ஒருவர் தற்போது இங்கிலாந்திலேயே 'ஸ்காட்டிஷ்ட்வீடுகள்' தயாரித்து வருகிறார்.

ஆங்கஸ் லிட்ஸ்டர் கிராம கருமான் ஒருவரால் செய்து கொடுக்கப்பட்ட பழங்கால கைத்தறி ஒன்றின் மூலம்தான் தனது தொழிலை எளிய முறையில் ஆரம்பித்தார். அவர் தம் வாடிக்கைக்காரர்கள் விரும்பும் ரகங்களிலேயே ட்வீடுகள் தயாரித்துக் கொடுக்கிறார். பொதுவாக புதுவித ரகங்களை மிஸ்டர் லிட்ஸ்ட்ர் தான் சிருஷ்டிக்கிறார் என்றாலும் சில சமயங்களில் வாடிக்கைக்காரர்கள் தங்களுக்குப் பிடித்தமான ரகத்தில் தயாரித்துக் கொடுக்கும்படி அவரை கேட்டுக்கொள்ளுகின்றனர். அவர் இவ்விதம் ஒரு நபருக்காக பிரத்யோகமாக தயாரிக்கும் ரகத்தை வேறொருவருக்குச் செய்து கொடுப்பதில்லை.

'ட்வீட்' தயாரிப்பதற்கான சாயமேற்றப்பட்ட கம்பளி ஸ்காட்லாந்திலிருந்து பிரத்யேகமாக அவருக்கு அனுப்பப்படுகிறது.

*



கைராட்டையே ஆயுதம்.........!



எளிமை நிறைந்த சூழ்நிலையும் வேலை ஊக்கமும்

தீர்ப்பு நிலையும், முக மலர்ச்சியும்

TRADE MARK GVR "குவாலிடி காப்பி" திருச்சி.

காசியில் கண்ட உயிரினம்

சமீப காலத்தில் இந்திய விலங்கின ஆராய்ச்சித்துறை டைரெக்டராகப் பதவி வகித்த டாக்டர் பி. என். சோப்ரா காசி நகரத்திலுள்ள கிணறுகளில் 'உயிருள்ள புதைபொருள்' ஒன்றைக் கண்டெடுத்திருக்கிறார். நுண்ணிய பூரான் போன்ற உடலமைப்பும், பளிங்குபோறை தோற்றமும் உள்ள "இறல்" வகை உயிரினந்தான் இப்போது கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த இறல் வகையின் மூதாதைகள் பத்துக்கோடி வருஷ காலத்துக்கு முந்திய உலகத்தில், பூமியின் இரண்டாவது ஊழிக்காலத்தில் பல்கிப் பெருகி வாழ்ந்ததாகத்தெரிகிறது. இந்தப் பழைமையான உயிரினத்தின்- உயிர்நூல் துறைச் சொல்லால், குறிப்பிடுவதானால், பிரிட்டாய்டியே இனத்தைச் சேர்ந்த ஐஸோபாதா பிரிவின்- பிரதிநிதி வர்க்கங்கள் இப்போது ஆஸ்திரேலியா, டாஸ்மானியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்காவின் கேப் மாகாணம் ஆகிய இடங்களில் மட்டுமேதான் காணப்படுகின்றன.

இந்தியாவில் இவை கண்டெடுக்கப் பட்டிருப்பதானது, சில ஆராய்ச்சி அறிஞர்களால் "கொந்த்வானு நிலம்" என்று குறிப்பிடப்படுவதும் உயிர் நூல் ஆராச்சியாளரால் "லெமூரியா கண்டம்" என்று குறிப்பிடப்படுவதும் ஆஸ்திரேலியா, டாஸ்மானியா, நியூசிலாந்து, ஆசியாவின் தென்பகுதி, தென் ஆபிரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவை சேர்ந்து ஒன்றாய்க் கிடந்ததுமான மாபெரும் பூபாகம் ஒன்று இருந்தது என்ற கருத்துக்கு ஆதரவளிக்கிறது. பூமி மட்டத்துக்கு அடியிலுள்ள நீர் நிலைகளில் இந்தச் சரித்திர முற்கால "இறல்" வாழ்ந்து வருவதாக இருக்கலாம். மழைக்காலங்களில் கிணறுகளில் தண்ணீர் மட்டம் மிகவும் உயர்ந்து விடும்போது இது மேலே கொண்டு வரப் பட்டிருக்கலாம். இந்தப் பருவகாலத்தில் அவை மிகவும் ஏராளமாகக் காணப்படுகின்றன. காசி தண்டுப் பிரதேசத்திலிருக்கும் "கெய்ஸர் அரண்மனை"யில் தண்ணீரைக் கிணற்றிலிருந்து பம்பின் உதவியால் மேல் தொட்டிக்கு ஏற்றிக் குளிப்பு அறையிலுள்ள குழாயைத் திறந்துவிட்டால் தொட்டிகளில் கூட இந்த இறல் மிதப்பதைக்காணலாம்.

இந்த ஜந்து விஷயமாய் விலங்கின ஆராய்ச்சித் துறையின இப்பிரிவில் தற்போது ஆராய்ச்சியாளராக இருக்கும் மி. கே. கே. திவாரி ஏற்கெனவே தீவிர ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டார். இந்த மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில், இந்த "இறல்" வகைகள் பூமிக்கடியிலுள்ள நீர்நிலைகளை அறிவிக்கும் அடையாளமாக உதக் கூடும்.

தந்தி விலாசம் :—'கோகுல்' Estd. 1909
போன் நெ. 57 Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனுதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

ஜெயபுரி காங்கிரஸ்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதென்ற பொதுவுடைமைக் கொள்கை மிகவும் இனிமையானது என்பதை தத்துவ ரீதியாக நாம் மறுக்கவுமில்லை. ஆனல் இப்போது நம்முடைய உடமை இன்னதென்றே நிர்ணயித்தாக வேண்டிய நிலையிலிருக்கிறோம் என்பதை மறக்க முடியாதல்லவா?

உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கி, பொருள்கள் தேவைக்குப் பஞ்சமில்லாமல் கிடைக்க முதலில் வழி செய்வதுடன், முதலாளிகளின் நியாயமான லாபமும் உழைப்பாளிக்கு தேவையான ஊதியமும் கிடைக்க முதலில் வழி செய்தாகவேண்டும். இது வெற்றிகரமாக நடைபெற்றாலன்றி, நமது உடமைகளைப் பற்றியோ அவற்றைப் பொதுவாக்கி விடுவது பற்றியோ இப்போதே கோஷங்களிட்டு தொழில் வர்க்கத்தின் உணர்ச்சித் தீயை உசுப்பிவிடுவது நன்மை பயக்காது. லட்சிய நிலை ஒன்று வேண்டியதுதான். ஆயினும் நடைமுறை நிலைக்கு ஏற்ற, வேலைத்திட்டத்தின் மூலம் தானே லட்சிய நிலையை எய்த முடியும்!

காங்கிரஸ்காரர்களின் ஒழுங்கு முறைபற்றிய தீர்மானம் ஒரு உண்மையைப் பிரதிபலிக்கும் எச்சரிக்கையாக அமைந்தது. காங்கிரஸ் காரர்கள் **ஒழுங்காயிருக்கவேண்டும் என்பதற்கும், இப்போது ஒழுங்காயில்லை என்பதற்கும்** இடையிலுள்ள பேதத்தைப் பண்டித நேரு எடுத்துக் காட்டிய முறை சிலருக்கு வருத்த மூட்டியிருந்தாலும், உண்மையை வற்புறுத்தியிருக்கிறது.

மொழிவாரிப்பிரிவினை விஷயத்தையும் ஜெயபுரி மாநாடு மறந்து விடவில்லை. அ. நி. சபை நியமித்த தார் கமிஷன் அறிக்கை வெளிவந்த பிறகும் இந்த விஷயத்தை மேற்கொண்டு ஆலோசனை செய்யக் குழு ஒன்று அமைக்கப் பட்டிருப்பது நம்பிக்கை யூட்டுவதாயும், நாட்டிலுள்ள உணர்ச்சியை உணர்ந்ததாயும் இருக்கிறது. மொழிவாரிப்பிரிவினையில் அதீத அக்கரை கொண்டுள்ள டாக்டர் பட்டாபியின் தலைமையின் கீழ் இத்தகைய புனராலோசனையுணர்ச்சி தோன்றியிருப்பது நாம் எதிர்பாராததல்ல.

* * *

பொதுவாக ஜெயபுரி காங்கிரஸ் ஆக்க உணர்வுடன் கூடிய காரிய மாநாடாகத் திகழ்ந்திருக்கிறது.

ஸ்ரீ தேவி நாடகசபா

தஞ்சைக்கு முகாம் செய்திருக்கும் **ஸ்ரீ** தேவி நாடக சபையினர் தங்களின் முதல் நாடகமாக மு. கருணாநிதி எழுதிய "**மந்திரி குமாரி**" என்னும் நாடகத்தை ராமனாதன் செட்டியார் ஹாலில் 14-12-48 செவ்வாய்க்கிழமை ஆரம்பம் செய்தார்கள்.

நோபல் பரிசுகள்

டைனமைட் வெடியைக் கண்டுபிடித்த பிரபல ஸ்வீடிஷ் விஞ்ஞானி ஆல்பிரட் நோபல் நிறுவிய டிரஸ்ட் நீதியின் வருவாயிலிருந்து 1901 ஆண்டுமுதல் பிரதி வருடமும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

பௌதிகம், ரசாயனம், வைத்தியம் அல்லது சரீர சாஸ்திரம், இலக்கியம், சமாதானம் இத் துறைகளில் மனித சமுதாயத்திற்காக அருந் தொண்டியற்றியவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

1948-ம் வருட நோபல் பரிசை இலக்கியத்திற்காக பெற்ற டி. எஸ். எலியட்டும், பௌதிகத்திற்காக பெற்ற பேராசிரியர் பிளாக்கெட்டும் பிரிட்டிஷ்காரராவார்கள்.

நோபல் பரிசின் மதிப்பு 8,400 பவுன்கள்.

இதுவரையில் பிரிட்டனில் மாத்திரம் 38 (பௌதிகம் 13 ரசாயனம் 7, வைத்திய சாஸ்திரம் 8, இலக்கியம் 5, சமாதானம் 5) நபர்கள் நோபல் பரிசை பெற்றிருக்கின்றனர்.

இந்தியாவில் நோபல் பரிசை பெற்றவர்கள் சர். சி. வி. ராமனும், காலஞ்சென்ற ரவீந்திரநாத தாகூரும்.

அரியலூர் டி.மு. கோர்ட்

S. C. 403/48

தங்கருசு படையாச்சி—வாதி
ஜெகநாத படையாச்சி—1-ம் பிரதிவாதி.

ஷை 1-ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பது.

வாதி உம்முடைய வகையறு பேரில் பிராமிஸரி நோட்டுப்படி ரூ. 78-14-0 சிலவு பின் வட்டி கிடைக்கதாவரசெய்து விசாரணைக்காக 27-12-48-உ ஈரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஷை ஈரங்கி தினம் காலை 10-மணிக்கு கோர்ட்டில் தாம் ஆஜராய் கக்ஷிகளை சொல்லிக்கொள்ளத்தவறினால்ஒரு தலைபக்ஷமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறியவும்.

(Sd.) E. S. வெங்கட்ருமய்யர்,
பிளீடர்

டோங்ரேயின்—
பாலாமிருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

மாஸ்கோவில் கல்பனு

மாஸ்கோ கலை அரங்கின் பொன்விழாக் கொண்டாட்டத்தையொட்டி, சோவியத் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கலாசாரத் தொடர்புச் சங்கம், அக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்படி உதயசங்கரையும் பிரசித்தி பெற்ற வேறுபல நடிகர்களையும் அழைத்திருந்தது. மாஸ்கோ கலை அரங்கின் 50-வது வருஷாந்தரக் கொண்டாட்டம் 1948 அக்டோபர் 27-ம் தேதியன்று நடைபெற்றது. ஆனால் உதயசங்கருக்கு அழைப்புக் கடிதம் போய்ச் சேருவதில் தாமதமேற்பட்டு விட்டபடியால் நவம்பர் 2-ந் தேதியன்று தான் அவர் அங்கு வந்துசேர்ந்தார். அவருடன் கூட அவரது மனைவியும் குழந்தையும் வந்திருந்தனர்.

உதயசங்கரின் வரவை மாஸ்கோவிலுள்ள இந்திய ஸ்தானிகாலயம் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. சென்ற ஜூனில் ஸ்ரீமதி தயாள் நிகழ்த்திய இசை விருந்து, இந்தியா விஷயத்தில் சோவியத் ரஷ்யா கொண்டிருந்த மனப்பான்மையை மாற்றி இவ்விரு நாடுகளுக்குமிடையே கலாசார உறவை வளர்ப்பதற்கு வழி கோலிற்று. சோவியத் எழுத்தாளர்கள் கலைவாணர்கள் ஆகியோர் "நலனுக்காக மாதத்துக்கொரு தடவை" "இந்திய மாலை நேர விருந்து"—களுக்கு ஏற்பாடு செய்ய இந்திய ஸ்தானிகராலயம் யோசித்துவந்தது. சோவியத் எழுத்தாளர்களுடனும் கலைவாணர்களுடனும் தொடர்பு கொள்ளத் தங்களுக்கு உதவி புரியுமாறு இவர்கள் அகில சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கலாசாரத் தொடர்புச் சங்கத்தைக் கேட்டிருந்தனர். ஆனால் அந்த சங்கம் இந்தியாவின் இத் திட்டம்பற்றி "யோசித்து"க் கொண்டிருக்கையிலேயே, உதயசங்கரின் வரவால் இந்தியா—ரஷ்யா கலாசாரத் தொடர்பில் புதியதொரு உத்வேகம் ஏற்பட்டுவிட்டது.

உதயசங்கருடன்கூட அவருடைய நாட்டிய கோஷ்டியினர் வராததால் நாட்டியக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆயினும், இந்திய நடனக் காட்சிகள் நிறைந்த "கல்பனு" சினிமாப்படம் அவரிடம் இருந்தது. சோவியத் வெளிநாட்டுக் கலாசாரத் தொடர்புச் சங்கம் ஸ்ரீ உதயசங்கரையும் அவருடைய மனைவியையும் அன்புடன் வரவேற்று, அந்தப் படத்தைத் தமது அரங்கிலேயே திரையிடவும் ஏற்பாடு செய்தனர். இட வசதிக் குறைவு காரணமாக, மிகப் பிரபலமான எழுத்தாளர்களையும், கலைவாணர்களையும் மாத்திரமே அச் சங்கம் அழைத்திருந்தது. சினிமாப் படத் தயாரிப்பாளர் ஜெராஸிமோவ், பிரபல சினிமா நட்சத்திரம் மகரோவா, பிரசித்தி பெற்ற பாடகர் ஷபோரின், உலகப் புகழ் பெற்ற நாட்டியக்காரர் யுலனோவா முதலியோரும் சோவியத் வெளி விவகார இலாகாவின் தென்கிழக்கு ஆசியாப் பிரிவின் தலைவரும், மற்ற அதிகாரிகளும் அக் காட்சிக்கு வந்திருந்தனர்.

காட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் ஸ்ரீமதி உதயசங்கர், இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே கலாசார உறவு போற்றி வளர்க்கப்படுமென்று தாம் நம்புவதாகக் கூறி சிறிது நேரம் வங்காளியில் பேசினர். அவருடைய பிரசங்கம் பின்னர் ரஷ்ய பாஷையில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

காட்சியின் ஆரம்பத்திலும், மத்தியில் சில முக்கியமான கட்டங்களிலும் கதையும் சம்பவங்களும் ரஷ்ய பாஷையில் விளக்கிக் கூறப்பட்டன. படத்தின் கலை நுணுக்கத்திலேயே சிரத்தை கொண்டிருந்த கலாரசிகர்கள் கதையின் போக்கு குறுக்கிட்டு இதைக் குலைப்பதாகக் கருதினர். "சம்பிரதாய முறைப்படி தயாரிக்கப்பட்ட சாதாரணப் படம்" என்றும் சிலர் பேசிக்கொண்டனர். காட்சியின் முடிவில், சினிமாப் படத் தயாரிப்பு இலாகா டைரெக்டர் கான் ஸேவ் ஒரு சிறிய பிரசங்கம் செய்தார். இந்தியாவின் கலையிலும், கலாசாரத்திலும் சோவியத் யூனியன் ஆழ்ந்த சிரத்தை கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு, படத்தைப் பற்றித் தம்முடைய அபிப்பிராயத்தை ஒளிவு மறைவின்றித் தாம் கூறுமற் போனல் தம்மை இந்தியாவின் நண்பனெனத் தாம் கருதிக்கொள்ள முடியாதென்று கூறினர். படத்தைப் பற்றிக் கூறுகையில், படத்தில் கிராம்ய நடனங்களைச் சேர்த்திருப்பது அதி அற்புதமாக இருப்பதாயும், ஆனல் படத்தைத் தயாரித்தவர் சில இடங்களில் வெளிநாட்டு நடனங்களின் சில அம்சங்களையும் இதில் கையாள முற்பட்டிருப்பது அவ்வளவு பொருத்தமாக இல்லையென்றும், இது காரணமாக, இந்தியப் பொதுமக்கள் இப் படத்தை அதிகம் விரும்பமாட்டார்களென்றே தாம் கருதுவதாகவும் சொன்னர்.

அதற்கு மறுநாள் இந்திய ஸ்தானிகாலயம், மற்றெரு காட்சிக்கு ஏற்பாடு செய்து மாஸ்கோவிலுள்ள வெளிநாட்டு ஸ்தானிகர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரையும் சங்கத்தில் ஏற்கெனவே இப்படத்தைப் பார்த்தவர்கள் உட்பட, சோவியத் கலைவாணர்கள் பலரையும் அழைத்திருந்தனர். இந்தக் காட்சி மிகப் பிரமாதமான வெற்றியடைந்ததென்றே சொல்ல வேண்டும்.

பொதுவாக எல்லோருமே படத்தைப் பெரிதும் பாராட்டினர். நடனக் காட்சிகள் மிக உயர்தரமாக இருப்பதுமட்டுமல்லாமல் படம்முழுதுமே மிக நன்றாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாகப் பலர் புகழ்ந்தனர். இந்தியாவில் இத்தகைய படங்கள், ஏன் பொதுவாக சினிமாப்படங்களே, தயாரிக்கப்படுகின்றன வென்பதை பலர் இப்பொழுது தான் முதல் தடவையாகத் தெரிந்துகொண்டனர்.

சோவியத் சினிமாப்படத்தயாரிப்பு இலாகா டைரெக்டர் உட்பட, இப்படத்தை இரண்டாந் தடவையாகப்பார்த்த ரஷ்யர்கள் பலர் படத்தின் உண்மையான மதிப்பை உணர்ந்து தாங்கள் முதலில் கூறிய அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விட்டனர்.

வெளிநாட்டுப் படங்கள் விஷயத்தில் சோவியத் சர்க்கார் கொண்டுள்ள அபிப்பிராயத்தையே ரஷ்யர்கள் பிரதிபலிக்க முயன்றனரென்றும், முதலில் படத்தைப் பார்க்கவந்தபோது அதைப்பற்றி முன்கூட்டியே ஒரு முடிவான அபிப்பிராயங் கொண்டு விட்டனரென்றும் தெரியவந்தது. இரண்டாந் தடவையாக இப்படத்தைப் பார்த்த பிறகு, சோவியத் யூனியனுக்கு வெளியிலிருந்து வருபவையெல்லாம் "சாதாரணமான"வையாகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லையென்பதையும், அப்படியே அவை சாதாரணமானவையாகவே இருந்துவிட்டாலும அவற்றை ஒதுக்கிவிடவோ உதறித் தள்ளிவிடவோ வேண்டுமென்ற கட்டாயமுமில்லை யென்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் இந்திய சினிமாப்படத்தைப் பார்ப்பது இதுவே முதல்தடவையாகும்.

இதைப்போன்ற சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு அதிகமாகக் கிடைத்தால் அவர்கள் இந்தியாவின் கலையையும் கலாசாரத்தையும் போற்றஆரம்பிப்பார்கள். இப்பொழுது உதயசங்கர் செய்ததுபோல் எப்பொழுதாவது ஒருதடவை சினிமாப் படங்களை இங்கு திரையிடுவதால் பலனென்றும் ஏற்பட்டுவிடாது. இதைத் தொடர்ந்து, சோவியத் மக்களுக்கு இந்தியாவின் கலையையும் கலாசாரத்தையும் படங்கள் மூலம் எடுத்துக்காட்ட தீவிர முயற்சி எடுத்து வந்தால் அது இந்தியாவுக்குப் பெரிதும் அனுகூலமளிப்பதாயிருக்கும்.

✱

லண்டனில் பார்ஸி கிளப்

இந்தியாவுக்கு வந்தே இராத மிஸஸ் ரோஸ் ஹார்ட்டிங் என்னும் ஆங்கில மாது லண்டனில் ஒரு பார்ஸி கிளப்பை நடத்தி வருகிறார். இவர் பார்ஸி உணவுகளை வெகுநேர்த்தியாக தயாரிக்கிறார். இக்கிளப்பிலுள்ள பார்ஸி அங்கத்தினர்கள் அவரிடம் அடிக்கடி, நீங்கள் செய்யும் காரியங்களைப் பார்த்தால் முன் பிறப்பில் நீங்கள் ஒரு பார்ஸியாக இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது, என்று கூறுகின்றனர். இக்கிளப்பு ஐரோப்பிய பார்ஸி சங்கத்திற்கு சொந்தமானது. கோடை மாதங்களில் இங்கிலாந்துக்கு வரும் அநேக பார்ஸிகள் இங்கு தங்குகின்றனர். சமீபத்தில் இக்கிளப்புக்கு விஜயம் செய்த சர். காவஸ்ஜி ஜிஹாங்கிர் கென்சிங்டனில் கிளப்புக்கு சொந்தமாக தனி கட்டிடம் வாங்குவதற்கென்று 5,000 பவுன் நன்கொடை அளித்தார்.

✱

அரியலூர் டி.மு. கோர்ட்

O S. 333/1948

உ. தா. ஜயங்கொண்டத்திலிருக்கும் மோட்டார் டிரைவர் கிருஷ்ணஜிராவ்—வாதி.

உ. தா. உஞ்சினியிலிருக்கும் குருசாமி வாத்தியார் குமாரர் நடராஜவாத்தியார் வகையரு—பிரதிவாதிகள்.

ஷை நெம்பர் 1-ம் பிரதிவாதி ஷை நடராஜ வாத்தியாருக்கு இதனல் தெரிவிப்பது யாதெனில்.

ஷை வாதி ஷை நம்பரில் உங்கள் வகையருபேரில் ரூ. 220—0—0 லைஸின் வாடகைக்கு எடுத்துப் போய் நஷ்டப்படுத்தியதற்காக கிடைக்க தாவா செய்து ஈறங்கி 29—12—48 போடப்பட்டிருக்கிறது. அன்று நீர் ஆஜராகி கக்ஷியை தெரிவித்துக்கொள்ளலாம். தவறினல் ஒரு தலை பக்ஷமாக தீர்ப்பாககூடும்.

R. RAGUNATHACHARI,
Pleader
21—12—48

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்,
கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

நோட்டீஸ்

அரியலூர் டி.மு. கோர்ட்
S. C. 772/48

முத்துக்குமார படையாச்சி-வாதி
மா. பாஸ்கரன்-பிரதிவாதி
ஷ பிரதிவாதிக்கு:-

ஷ நெம்பரில் பிரதிவாதிக்கு பல தடவைகளில் சம்மன் போயும் சார்வாகாததால் ஒட்டி சார்வு செய்ய மனுக்கொடுத்து உத்திரவாகி சம்மன் படி கட்டி 28-12-48-க்கு ஈரங்கி வைக்கப் பட்டிருக்கிறது. அன்று ஆஜராகி ஆக்ஷேபணையை தெரிவித்துக் கொள்ளாவிடில் ஒருதலைபக்ஷமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவேண்டியது.

N. V. RENGASAMI IYENGAR,
Vakil

அரியலூர் - 21-12-48.

சிவாஜி
சந்தா விபரம்

வருட சந்தா ரூ. 7-0-0
ஆறு மாதம் ரூ. 3-8-0

சிறுகதை

தை பிறக்குமா?

புஷ்பா-வரதன்

........தினமொரு "மாடலும்" பொழுதொரு "பௌடரு"மாக இருக்கும் இந்தக் காலத்தில் இவளை எவன் மணந்துகொள்வான்?......

பனிரெண்டு மாதங்களுந்தான் பிறக்கின்றன. ஒவ்வொரு மாதப் பிறப்பையும் நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். (மாதம் பிறந்தால் சம்பளம் வரும் என்ற எண்ணம் எவ்வளவோ குதூகலமளிக்கிறது) சில மாதங்கள் மட்டும் நம் முழுக்கவனத்துக்கும் பாத்திரமாயிருக்கின்றன. அதிலும் "தை" மாதத்திற்கு அலாதியான கௌரவம். அதைக் கண்டு பிறமாதங்கள் பொறுமைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...ஏன்?......

ஏழை விவசாயி தன் உழைப்பின் பலனை அனுபவிக்கக் காத்துக்கிடக்கும் நாள்.

மிராசுதார், பண்ணைக்காரர் தானிய லட்சுமியின் அரவணைப்பில் மிதந்து கிடக்கும் நாள். கூலிக்கார மக்கள் வயிறார உண்டு களித்திடும் நாள். மனித சமூகமே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி எழும் நாள்.

எங்கும் புதுப் பொங்கல் பொங்கும் நாள். கன்னியர்—இளைஞர் காதற் கோட்டைகளைக் காத்துக் கலிதீர்க்கும் நன்னாள் அது.

சின்னஞ் சிறு உள்ளங்களின் முடிவில்லாத கற்பனைகளுக்கு இந்தத் தைமாதம் ஒரு எல்லையை வகுத்துவிடுகிறது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்"— என்ற வாக்கு அவர்களுக்குச் சாந்தி அளிக்கிறது. வெறும் வறட்டுக் கற்பனையிலிருந்து விழித்துக் கொண்டு எதிர் நோக்கி நிற்கும் வாழ்க்கையில் கவனம் திரும்புகிறது.

பேதை வத்ஸலா இந்தத் தை மாதத்தை நம்பி உயிர் வாழ்பவள். அதற்காகவே உயிரை வைத்துக்கொண்டிருக் கிறாள். அவளை ஏமாற்றிவிட்டுச் சென்ற "தை" மாதம் எத்தனை எத்தனையோ? இருந்தாலும் அவள் நம்பிக்கை ஏனோ சிறிதும் தளரவில்லை.

அவளது வாழ்நாளில் என்றாவது ஒருநாள் அது வந்தே தீரும். அதற்குள் அவசரப் படக்கூடாது. இந்த எண்ணமே ஊசலாடும் உயிருக்கு ஜீவனளித்து வந்தது. அவள் தந்தை எட்டு வருடமாக வரன் தேடிக் கொண்டிருக்கிறார். அவளை மணக்க ஒருவனும் முன்வரவில்லை. அதனால் கன்னி வாழ்வு நீடித்துக்கொண்டு வருகிறது. அவரும் "மனித ஜன்மம்" தானே?... அலுப்புச் சலிப்பு வாராதா? இந்த தைமாதத்துடன் வரன் தேடுபடலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவதென்று முடிவு செய்துவிட்டார்.

அப்படியொன்றும் அவள் குரூபியல்ல; (புருஷர்கள் எல்லோரும் மன்மத அவதாரமோ?) போதாதகாலம்...ஈசன் ஏழ்மையைக் கொடுத்துவிட்டான். இவ்வுலகில் அலட்சியத்திற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்?

ஏதோ சுமாராக எழுதப் படிக்கத் தெரியும். மா நிறந்தான்...மயில் தோகைபோன்று அடர்ந்து நீண்ட சுருள் சுருளான கருங்கூந்தல். மஞ்சள் பூசிய நெற்றியில் வட்டமான சிறு குங்குமப்பொட்டு. இன்ன கலர் என்று கண்டுபிடிக்க முடியாமல் சாயமின்றி வெளிறிப் போனகந்தல் சிற்றாடை. அதே போல் ரவிக்கை.

தினமொரு "மாடலும்" பொழுதொரு "பௌடரு"மாக இருக்கும் இந்தக்காலத்தில் எவன் மணந்து கொள்வான்.?

"பௌடர் பூசாமேனி மங்கும்" என்ற உண்மையை ஆராய்ச்சியாளர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். உலகமறியாத அவளுக்கு இதெல்லாம் எப்படித்தெரியும்?

வழக்கம்போல் தை மாதம் பிறந்தது. தன் கடமையைச் செய்ய அவள் தந்தையும் புறப்பட்டார். சுற்றாத இடமில்லை; பார்க்காத பிள்ளையில்லை. பக்கத்து வீடுகூடத் தெரியாமல் வீட்டோடு அடைந்து கிடக்கும் தாய்கூட, கோடிவீட்டுப்பாட்டியிடமும், உபாதானத்துக்கு வரும் எச்சிப்பாட்டியிடமும் தன் பெண்ணுக்கு வரன் தேடச் சொன்னாள். இவையெல்லாம் வத்ஸலாவின் நம்பிக்கைக்குப் பெரிதும் ஆதரவு தந்தன. ஒவ்வொரு தினமும் சந்தோஷ சமாசாரத்துடன் வரும் தந்தையை எதிர் நோக்கிக்கொண்டிருந்தாள். அவநம்பிக்கையைப்பற்றியோ, ஏமாற்றம் பற்றியோ அவள் ஒரு சிறிதும் கருதவில்லை. பாவம்....எட்டுவருட அனுபவத்திலும் மண்ணைப் போட்டுவிட்டுப் பேதை பாழும்ஆசையை விடாமல் வைத்துக்கொண்டிருந்தாள்.

காலச்சக்கரம் தினம், வாரம், மாதமாகச் சுழன்று சென்றது வைகாசியும் விடைபெற்றுக் கொள்ளும்தருணம்.

"கண்டேன் சீதையை" என்று சொல்லிக்கொண்டு அனுமன் வந்ததுபோல், "பிடித்தேன் மாப்பிள்ளையை" என்று சொல்லிக்கொண்டு வந்தார் அவள் தந்தை. அந்த ஒருவார்த்தை எல்லோர் இதயத்திலும் இன்பத்தைக்கொடுத்தது.

"மாப்பிள்ளை பரம ஏழை.... குடியிருக்கும் வீடு தவிர வேறு சொத்து எதுவும் கிடையாது. தந்தை காலமாகிவிட்டார். தாயும் விவாகமாகாத இரு சகோதரிகளுமிருக்கிறார்கள். ஒரு மிராசுதாரிடத்தில் சொற்ப சம்பளத்தில் வேலைபார்த்து வருகிறான். குடும்பம் அதைக் கொண்டுதான் நடக்கவேண்டும். தங்கைக்கு வரன்தேடிக்கொண்டிருக்கிறான். தனக்கு கலியாணம் வேண்டாமென்கிறான். தாயார் செய்துகொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறாள். அதற்காக, தங்கைக்கு முடிந்தபின் தான் செய்துகொள்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறான். இன்னும் ஒரு வாரத்தில் பெண்ணைப்பார்க்க வருவதாயும் மற்ற விஷயங்களை நேரில் பேசிக்கொண்டு முகூர்த்தத்தை ஆனிக்குள் முடித்து விடலாமென சொன்னான். கடவுள் கிருபையால் இந்த வரன் ஏற்பாடானால் கலியாணம் நிச்சயம். இல்லாவிட்டால் அடுத்த தை மாதம் தான். நம் வத்ஸலாவின் விதி எப்படி இருக்கிறதோ. யார்கண்டார்" என்று தான் போய்வந்த சமாசாரத்தைப் பிரசங்கித்து முடித்தார் அவள் தந்தை!

"சாரமற்ற விஷயம். இதைத் தவிர வேறு இடங்கிடையாது. இதிலும் நம்பிக்கைக்கு ஆதாரமில்லை. அப்படியானால் எண்ணமும் வாழ்வும் என்ன ஆவது? அவள் கனவு கண்ட பசுஞ்சோலை வெறும் பொட்டல் வெளியா? லட்சியமில்லாத பாலைவனத்தில் வாழ ஏன் பெண் ஜன்மத்தை அளித்தான் ஈசன்? இவ்வுலகில் ஆண் பூண்டு அற்றுப்போய் விட்டதா என்ன...?"

பாவம்....பேதை வத்ஸலாவின் உள்ளக்கடல் கொந்தளித்து எழுந்தது. அதற்கிடையில் நம்பிக்கை எனும் பேதமைகோடு கிழித்துச்சென்றது.

ஒவ்வொரு விநாடியும் மாப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்திருந்தனர். ஆனால்?...ஆனியும் சென்றது. ஒரு தகவலும் இல்லை. நிச்சிந்தையான ஸ்மசான அமைதி எல்லோரிடமும் குடிகொண்டது........ பேதை வத்ஸலா....

அவள் எப்போதும் போல் நம்பிக்கையுடனிருக்கிறாள். இந்த லட்சியத்திற்காக தன் வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கிறாள். அதற்காக ஒன்றல்ல; இரண்டல்ல....எத்தனை தை பிறந்தாலும் காத்துக் கொண்டிருப்பாள்.

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது, ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாட்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd., MADRAS.

கைரேகைகளும் நோய்களும்

உள்ளங்கைகளில் உள்ள ரேகைகளில் உள்ள கோடுகளையும் விரல்களிலுள்ள கோடுகளையும் கவனித்துப் பார்ப்பது வெறும் ரேகைசாஸ்திர மன்று. விஞ்ஞானத்திற்கும் இக் கோடுகள் உபயோகப்படும் என்பதை நிரூபிக்கலாம் என்று பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். இத் துறையில் முதல் பரிசோதனைக்காக ஹெர்போர்ட்ஷையர் பள்ளிக்குழந்தைகளின் கைகளிலும் விரல்களிலும் உள்ள கோடுகளைக் கொண்டு இக் குழந்தைகளிடம் பரம்பரை வியாதிகள் இருக்கின்றனவா என்பதை அறிய முயற்சிசெய்யப்பட்டு வருகிறது.

சில பெற்றோர்களின் கைகளிலுள்ள கோடுகளும் முகடுகளும் அவர்களது குழந்தைகளின் கைகளிலும் காணப்படுவதால், இவைகள் சில பரம்பரையான விதிகளை நிர்ணயஞ் செய்வதற்கு உதவக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஏற்கனவேயே சில குழந்தைகளின், வேறு விதங்களில் கண்டுபிடிக்க முடியாத வியாதிகள் உள்ளங்கைகளைப் பார்த்து சரியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக விவாகமாகப் போகிறவர்களுக்கு இம்முறை மிகவும் உபயோகப்படும்.

இவ் விஷயமாக தற்போது நடத்தப்பட்டுவரும் சோதனைகளெல்லாம், லண்டன் யூனிவர்ஸிடி கல்லூரியிலுள்ள கால்டன் ஜெனிடிக்ஸ் ஆராய்ச்சிசாலையின் (Galton Genetics Laboratory) டைரக்டரான பேராசிரியர் லயனல் பென்ரோஸின் மேற்பார்வையின் கீழ் இருந்துவருகின்றன.

ரேகை சாஸ்த்திரம்

"சிவதாஸன்"

கைகளில் மூன்று வகை

சென்ற வாரக் கட்டுரையில் நடக்கும்பொழுது கைகளை வைத்துக்கொண்டு போகும் விதங்களில் மூன்றைப்பற்றி சொன்னேன். இன்னும் சில விதங்களைப் பற்றியும், கைகளின் அமைப்பைப்பற்றியும் கவனிப்போம்.

சிலர் கைகளை இருக மூடிக்கொண்டு, சிந்தனையை எந்தப் பக்கமும் செலுத்தாமல் நடப்பவர்கள். இவர்கள் ஆழ்ந்த யோசனை உள்ளவர்களாகவும், எடுத்த காரியத்தை முடிக்கக் கூடியவர்களாயும், தம்மைப் பற்றி எவரேனும் குற்றமாகச் சொன்னால் அதிகமான கோபத்தை வெளிக் காண்பிப்பவர்களாகவும் இருப்பதை பார்க்கலாம். இவர்களுக்கு அநேகமாக ஸ்திரமான வாழ்க்கை இருக்கும். அடுத்தபடியாக கைகளை தங்களுடைய உடைகளில் மறைத்துக்கொண்டு போகும் சிலர் இருக்கிறார்கள். பொதுவாக எவர் தம்மைப் பற்றி அதிகம் மறைத்துக் கொள்கிறார்களோ அவர்களின் வாழ்க்கையில் பல ரகசியமான விஷயங்கள் இருக்கவேண்டும் என்பது கருத்து. அதுபோல் இவர்களுடைய வாழ்க்கையில் பல அந்தரங்கமான விஷயங்கள் நிறைந்து கிடக்கும். சாதாரணமாக மனதை தளர விடமாட்டார்கள். பிறர் இவர்களின் குற்றங்குறைகளைப்பற்றி சொல்லுவதற்கு பிரியப்படமாட்டார்கள்.

ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நடப்பவர்கள் சதா யோசிப்பவர்களாகவும் எதிலும் தீவிரமான யோசனை இல்லாதவர்களாகவும் இருப்பர். நடக்கும்பொழுது இரண்டு பக்கங்களிலும் தம்முடைய கவனத்தைச்செலுத்துவோர், எதிலும் திடசித்தமில்லாமலும், முன் யோசனை இல்லாமலும் தங்களுடைய காரியங்களை செய்வார்கள்.

நிற்க, இனி கைகளின் அமைப்பைப்பற்றி கவனிப்போம். கைகளின் அமைப்பில் மேலே சொன்னவைகளை விட அதிக குண விசேடங்களை பார்க்க முடியும். அநேக ஆராய்ச்சிக் காரர்கள் கைகளின் அமைப்புபற்றி விதவிதமாக சொல்லியிருக்கிறார்கள். முக்கியமான அமைப்புகள் மூன்று 1. சதுரக்கை 2. நடுத்தரக்கை. 3. நீண்டகை இந்த அமைப்பைப்பற்றி கவனிக்குமுன் கை கடினமானதாக இருக்கிறதா, மிருதுவானதா அல்லது அதீதமாக சதைப் பிடிப்போடு கூடினதா என்று கவனிக்கவேண்டும்.

சதுரக்கைகளை யுடையவர்கள் வாழ்க்கையில் எந்த வேலையிலிருந்தாலும் நல்ல தேர்ச்சிபெற்றவர்களாக இருப்பதை பார்க்கலாம். நல்ல வியாபாரிகளாகவும் வக்கீல்களாகவும் விளங்குவார்கள். பணம் பாக்யம் இவர்களிடம் விளங்கும். ஆனால் இவர்கள் சமயத்தில் தங்கள் காரியத்தில் கண்ணுடையவர்களாகவே இருப்பார்கள். சதுரக்கையை யுடையவர்களின் விரல்கள் நல்ல வளர்ச்சியுடனும், உள்ளங்கைக்கு பொருத்தமாகவும் இருக்கும்.

இரண்டாவதாக நீண்ட கைகளின் விரல்கள் நீண்டும் நகங்கள் கூர்மையாயும் இருக்கும். ஐந்து விரல்களையும் சற்று மடக்கி வைத்துக்கொண்டு பார்த்தால் மலர்ந்த பூவைப்போல் பிரகாசிக்கும் கை இது. பார்ப்பதற்கும் அழகும் சாந்தியும் கொடுக்கும். அதிகமாக கடவுள் பக்தியில் ஈடுபட்டவர்களாயும், சத்தியத்தில் நம்பிக்கை கொண்டவர்களாயும் இருப்பார்கள். நல்ல சங்கீத ஞானமும் இவர்களிடம் காணலாம். எப்பொழுதும் பொறுமையாகவே காணப்படுவார்கள்.

மூன்றாவதாக நடுத்தர கை விரல்களின் அமைப்பு சரிவர இல்லாமல் இருக்கும். இது சதா மாறும் குணத்தை காண்பிக்கிறது. மன உறுதி, திட சங்கல்பம் என்பது இவர்களிடம் காணமுடியாது.

கைகள் மிகவும் அதிகமாக சதைப்பிடிப்புடன் இருத்தல் கூடாது. கடினமான சித்தம் என்பதை இது காட்டுகிறது. மிகவும் முன் யோசனையுடன் இவர்களுடன் பழக வேண்டும். குழந்தைகளின் கைகள் மிகவும் மிருதுவாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரி மிருதுவான கையுடையவர்கள் அதிகம் கள்ளம் கபட மில்லாமலும் கற்பனசக்தி அதிகம் கொண்டவர்களாயும் இருப்பார்கள். பெண்கள் இயற்கையாகவே அதிகம் கற்பனசக்தி யுடையவர்கள். பெண்களின் கைகள் மிருதுவாக இருப்பதைப் பார்க்கிறோம். கைகள் மிகவும் கெட்டியாகவும் கடினமானதாகவும் இருந்தால் மிக்க தைரியசாலிகளாகவும், கஷ்டங்களைப்பற்றி பொருட்படுத்தாமலும் இருப்பார்கள். இவர்கள் அதிகமாக பேசுவது கிடையாது.

நிற்க, ஒருவரின் ரேகைகளை பார்த்து பலன் சொல்வதற்கு முன்னால் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இன்னும் இரண்டு. அதாவது பெருவிரல் அமைப்பும், நகங்களின் அமைப்பும். இவைகளைப்பற்றியும், ஒன்பது கிரகங்களில் முக்கியமான ஏழு கிரகங்கள் கைகளில் எந்த இடத்தில் அமைந்திருக்கிறார்கள் என்பது பற்றியும் அடுத்த வாரம் கூறுகிறேன்.

★

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
துலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

மாஜி சென்னை கவர்னரும், தற்போது பிரிட்டிஷ் ஹை கமிஷனருமான ஆர்சிபால்டு நை, வி. பி. மேனன், சைமன் ஆகியோர்.

இச்சித்திரக்கோப்பை **1578-ம்** ஆண்டில் எலிஸபெத் ராணியின் காலத்தில் வர்ஸெலனி என்பவரால் உருவாக்கப்பட்டது. புராதனப் பொருட்காட்சியோன்றில் இன்று அமர்ந்திருக்கிறது.

★

சர்க்கரை "வள்ளி"

சர்க்கரை ரொம்ப இனியது. 'வள்ளி'யும் இனியவள் தான்—குறும்பு கலந்த இனிமை அவள் பாங்கு. வேலன் இதம் கவர்ந்த மடமானின் இங்கிதத்தையும், சர்க்கரையின் இனிப்பையும் பெயரில் பெரிதளவும், குணத்தில் சிறிதளவும் சேர்த்திருக்கும் சர்க்கரை வள்ளிக் கிழங்கை எண்ணி எண்ணிச் சேர்க்கும் தாய்மைப்பொலிவு மிக்க இம்மாதர்மணிகளின் இதழ்களில் புன் முறுவல் பூக்காமல் என்ன செய்யும். மொரிஷியஸ் தினசரி வாழ்க்கையில் இது ஒருகாட்சி. இந்தியாவென்று நினைத்தீர்களோ? பரவாயில்லை; பண்பில் பேதம் அதிகமில்லையல்லவா?

★

Printed at the Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).